பக்கங்கள்: 12+IV=பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 13 வெள்ளிக்கிழமை (29-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:03

# ஜப்பானில் ஐந்தாம் கட்ட சமாதானப் பேச்சுக்கள்; ஆறாம் கட்டப் பேச்சுக்கள் தென்னாபிரிக்காவில்!

கொழும்பு,நவ.29

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான ஐந்தாம், ஆறாம் கட்ட பேச்சுக்கள் முறையே ஜப்பானிலும், தென்னாபிரிக்காவிலும் நடைபெறும் என்று அமைச்சர் பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, விடுதலைப் போராட்டங்களை அனுபவரீதியாக உணர்ந்தவர். எனவே, அவர் இலங்கையில் யுத்தம் ஒன்று மீண்டும் ஏற்படக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றார். ஜப்பான் சமாதானப் பேச்சுக்களின் பின் அடுத்த கட்டப் பேச்சுக்களை தென்னாபிரிக்காவில் நடத்த சகல உதவிகளையும் வழங்கத் தாம் தயாராக இருப்பதாக தென்னாபிரிக்கத் தலைவர்கள் உறுதி அளித்துள்ளனர் எனவும் அமைச்சர் பீரிஸ் சொன்னார்.

மே மாதம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்குமுன் மார்ச் மாதத்தில் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஐந்தாவது கட்ட சமாதானப் பேச்சு ஜப்பானில் நடைபெற வேண்டும் என்று ஜப்பான் வலியுறுத்தி இருப்பதோடு அதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

மூன்றாவது கட்டப் பேச்சுக்கள் டிசெம்பர் இரண்டாம் திகதிமுதல் ஐந்தாம் திகதிவரை மீண்டும் ஒஸ்லோவிலும் நான்காம் கட்டப் பேச்சுக்கள் ஜனவரி ஆறாம் திகதிமுதல் ஒன்பதாம் திகதிவரை தாய்லாந்திலும் நடைபெறும் என்றும் அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் கூறினார். (ஐ-12)

# பிரபாவின் மாவீரர் நாள் உரைக்கு அரசு மனப்பூர்வமாக வரவேற்பு

## சமாதானப் பேச்சுக்கள் முறியமாட்டா என்றும் அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை


கொழும்பு,நவம்பர்29

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்றுமுன்தினம் ஆற்றிய மாவீரர்தின உரையை அரசு மனப்பூர்வமாக வரவேற்றிருக்கிறது. விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் முறிவடையும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதில் அரசு நம்பிக்கையும் கொண்டிருக்கிறது.**

அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று இவற்றைத் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றிய போதே

(12 ஆம் பக்கம் பார்க்க)



முல்லைத்தீவுக் கடலில் நேற்றுமுன்தினம் கடற்புலிகளின் படகு அணிவகுப்பின் போது எடுக்கப்பட்ட படங்களில் ஒன்று.

*(மேலும் படங்கள் மூன்றாம் பக்கத்தில்)*

## 2 ஆம் திகதி ஒஸ்லோ பேச்சில் முக்கியமாக மூன்று விடயங்கள்

- ஒஸ்லோவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஒஸ்லோ,நவ.29

எதிர்வரும் திங்கட்கிழமை 2ஆம் திகதிமுதல் இலங்கைஅரசுப் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறும் மூன்றாவது சுற்றுப்பேச்சுக்களின்போது மூன்று முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படும்.

நோர்வே அனுசரணையாளர் குழுவின் பிரதிநிதியும் நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகருமான எரிக் சொல்ஹெய்ம் நேற்று ஒஸ்லோவில் வைத்து 'உதயன்' பிரதிநிதிக்கு அளித்த பேட்டியில் இத் தகவலை வெளியிட்டார். நோர்வே வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் வைத்து அவர் பேட்டியளித்தார். அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் குறித்து அவர் தெரிவித்ததாவது:-

தலைநகர் ஒஸ்லோவில் நகரின் மத்தியில் உள்ள பெரிய ஹோட்டலான றடிஸன் எஸ்.ஏ.எஸ்.பிளாஸாவில் (RADISON S.A.S.PLAZA) திங்கட்கிழமை நண்பகல்முதல் வியாழன நண்பகல்வரை ஆறு அமர்வுகளில் பேச்சுக்கள் நடைபெறும். வியாழன் மாலையில் பத்திரிகையாளர் மாநாடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி

## பருத்தித்துறை செயலகம் முன் மீனவர்கள் நேற்று மறியற்போர்!

வடமராட்சி,நவ.29

பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயத்துடன் ஒட்டிய துறைமுகப்பகுதி கொட்டடி, இரண்டாம் குறுக்குத்தெரு, மூன்றாம் குறுக்குத்தெரு, சின்னத்தோட்டம் ஆகிய இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி கொட்டடி மீனவர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 8 மணியளவில் பருத்தித்துறை பிரதேசசெயலகத்தை முற்றுகையிட்ட மீனவர்கள், பிரதேச செயலகத்தைத் திறக்க விடாது மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அங்கு வந்துசேர்ந்ததும் மீனவர்கள் தமது வீடுகளில் தாங்கள் குடியமர அனுமதிக்குமாறு கோரி மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலர் ஆசிவகுமார், மீனவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக உரியவர்களுடன் தொடர்புகொண்டு தகவல் தருவதாகத் தெரிவித்தார். அதன்பின்னர் மீனவர்கள் மறியற்போராட்டத்தை விடுத்து கலைந்து சென்றனர்.

சுமார் ஒன்றரை மணிநேரம் ஸ்தம்பிதமடைந்திருந்த பிரதேச செயலகம் பின்னர் காலை 10 மணி தொடக்கம் பணிகளுக்காகத் திறக்கப்பட்டது. (ஐ-173-70-34)

## நாடாளுமன்றில் பிரதமர் இன்று விளக்கவுரை

கொழும்பு,நவ.29

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளின் பொலீஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன எனக் கூறப்படுவது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனி ஆளுநர்கள் சாத்தியமா?

### ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி தகவல்

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனியான ஆளுநர்களை நியமிப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

தேசிய அமைப்புக்களின் சம்மேளனப் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் சந்தித்த பொழுதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் தனித் தனியாகவே செயற்பட்டு வருவதால், அவ்விரு மாகாணங்களுக்கும் தனித்தனி ஆளுநர்களை நியமிக்கும் வாய்ப்புக் குறித்து அரசியல் சட்டத்தைத் தான் ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு ~ கிழக்கு நிலைமையை ஆராய பிரதமர் தலைமையில் கூட்டம்

கொழும்பு,நவ.29

வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவொன்று இன்று கூடுகின்றது.

இந்தப் பிராந்தியங்களில் வாழும சகல மக்களினதும் நலன்களைப் பாதுகாப்பது தொடர்பாக ஆராயவே இந்தக் கூட்டம் கூட்டப்படவுள்ளது.

இப்பகுதிகளில் இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்படும் புலிகளின் நீதிமன்றங்கள், பொலீஸ்நிலையங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட ஹெலிகொப்டரில்

## தளபதி கருணா நேற்று கொழும்பு புறப்பட்டார்

செங்கலடி,நவ.29

விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் கருணா நேற்றுக் காலை கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் பழுகாமம் படுவான்கரையில் விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று தரையிறக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நெடுந்தீவு மக்களின் கோரிக்கையை அரசு புறக்கணித்துவிடக் கூடாது!

## அங்கு சென்ற அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

நெடுந்தீவு,நவ.29

நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேற்றக்கோரி அப்பகுதி மக்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்தை கவனத்தில் எடுத்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளாவிடில் அரசுக்கு எதிராக சில அழுத்தங்களைக் கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவோம்.

- இவ்வாறு கூறினார் இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன். நெடுந்தீவு நிலைமையை நேரில் காண்பிப்பதற்காக வடக்கு, தெற்கு பகுதிகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை அமைச்சர் நேற்று நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு நெடுந்தீவுப் பிரதேசசபை முன்றிலில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

நெடுந்தீவில் மக்கள் மேற்கொள்ளும் உண்ணாவிரதம் சாத்வீகமானது; புனிதமானது; அர்த்தபுஷ்டிமிக்கது என்பதனை வெளி உலகுக்கு உணர்த்தவே நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த ஊடகவியலாளர்களும் இங்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

போராட்டத்தில் மக்கள் கொண்டுள்ள உணர்ச்சிக்கொதிப்பு எமக்கும் உண்டு. அதை சரியான முறையில் வெளிப்படுத்துவதற்கு நாடாளுமன்ற பலத்தைப் பாவிப்போம். ஆளும் கட்சியில் அங்கம் வகிப்பவன் என்ற வகையில் நானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நெடுந்தீவு மக்களின் கோரிகைக்குப் பதில் தருமாறு அரசுக்கு அழுத்தம் கொடுப்போம். சாதகமான பதில் கிட்டாவிடில் அரசுக்கு எதிரான அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நிலைக்கு நாம் தள்ளப்படலாம்.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் தற்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விவாதம் இன்றும் நடைபெறவுள்ளது. ஆகவே, வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவது குறித்து பரிசீலிக்கும் நிலைக்கும் நாம் தள்ளப்படலாம் - என்றார் மகேஸ்வரன்.

அமைச்சர் மகேஸ்வரனுடன் தமிழர் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான என்.ரவிராஜும் நேற்று நெடுந்தீவுக்கு வந்திருந்தார்.

நேற்றைய நிகழ்வில் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுசென்ற ஓட்டோ ஒன்றை அமைச்சர் மகேஸ்வரன் தனது அமைச்சின் சார்பில் நெடுந்தீவு மக்கள் ஒன்றியப் பிரதிநிதியிடம் கையளித்தார். (ஐ)

### செய்தியாளர்களுக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

அமைச்சர் தி.மகேஸ்வரன் ஏற்பாட்டில் நேற்று நெடுந்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட உள்ளூர் மற்றும் வெளியூர் ஊடகவியலாளர்களில் சிலர் ஊடகவியலாளர்கள் என்பதை உறுதிப்படுத்தும் அடையாள அட்டைகளை வைத்திருக்காத காரணத்தால் குறிகாட்டுவானில் வைத்து கடற்படையினரால் தடுக்கப்பட்டனர். அவர்கள் நெடுந்தீவுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இடைவழியில் இவ்வாறு கடற்படையினரால் அனுமதி மறுக்கப்பட்ட செய்தியாளர்களை நெடுந்தீவுக்கு அழைத்துச் செல்ல அமைச்சர் மகேஸ்வரன் முயன்றார்; கடற்படை அதிகாரிகளுடன் பேசிப் பார்த்தார். ஆனால், அனுமதி வழங்க அதிகாரிகள் அடியோடு மறுத்துவிட்டனர். இதனால் அந்தச் செய்தியாளர்கள் நெடுந்தீவுக்குச செல்லாமல் திரும்பினர். (ஐ-5)

# மக்கள் வங்கி தனியார் மயம் குறித்து மறுபரிசீலனை செய்ய அரசு முடிவு

கொழும்பு,நவ.29

மக்கள் வங்கியைத் தனியார் மயபபடுத்துவதற்கு அரசு கொண்டிருந்த தீர்மானத்தை மறுபரிசீலனை செய்வதென அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

கடந்த பொ.ஐ.முன்னணி அரசு, மக்கள் வங்கியைத் தனியார் மயப்படுத்துவற்கு மேற்கொண்டிருந்த தீர்மானத்தின்படி, மக்கள் வங்கியை தனியார் மயப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் ஐ.தே.முன்னணி அரசு தயார்ப்படுத்தியிருந்தது.

இருப்பினும், அந்த நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து, அது குறித்து விரிவான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதெனவும் அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

மக்கள் வங்கியைத் தனியார் மயபபடுத்தும் அரசின் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார். (ஐ)

### வவுனியாவில்

# ஈ.பி.ஆர்.எல்.எவ். முகாமிலிருந்து தப்பிய சிறுவன் புலிகளிடம் சரண்!

வவுனியா,நவ.29

வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் என்று கூறப்படும் சிறுவன் ஒருவன் தப்பிச்சென்று விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளான்.

வவுனியா, தவசிகுளப் பகுதியைச் சேர்ந்த இராமர் இராமச்சந்திரன் (வயது 16) என்ற சிறுவனே புலிகளிடம் சரணடைந்துள்ளான்.

ஆயுதமுனையில் தன்னைக் கடத்திச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியினர், முகாம் ஒன்றில் சமையல் மற்றும் தொண்டு வேலைகளில் தன்னை ஈடுபடுத்தினர் என்று அச்சிறுவன் தெரிவித்துள்ளான்.

கடைசியாகத் தப்பிச் சென்ற வேளை பொதுமக்கள் சிலர் சிறுவனைக் காப்பாற்றி அவனை விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினரிடம் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த சிறுவன் தற்போது மனித உரிமை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளான். (ஐ-164)

# பொன்னாலையில் மீள்குடியமர்வு

வலி.மேற்கு,நவ.29

பொன்னாலையில் பாதுகாப்பு படையினரால் அனுமதியளிக்கப்பட்ட பகுதியில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். இதற்கான சகல நடவடிக்கைகளையும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினரும் அப்பகுதி கிராம உத்தியோகத்தரும் மேற்கொண்டுள்ளனர்.

சுமார் 320 குடும்பங்கள் பொன்னாலையில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளன. மீளக்குடியமர்த்தப்படவுள்ள 320 குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஒ-175)

# ஆர்.எம்.பி., ஏ.எம்.பி. டாக்டர்களுக்கு ஜனவரி மாதம்முதல் இடமாற்றம்

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் (ஆர்.எம்.பி.), உதவி வைத்திய அதிகாரிகள் (ஏ.எம்.பி.) ஆகியோருக்கான 2003 ஆம் வருடத்திற்கான இடமாற்ற அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. யாழ்மாவட்டத்தில் நீண்டகாலமாக பணிபுரிந்துவரும் டாக்டர்கள் சிலரும இந்த இடமாற்றத் திட்டத்தின்கீழ் பிற மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யபட்டுள்ளனர்.

இந்த இடமாற்ற அறிவித்தலின் பிரகாரம் கொக்குவில் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.சிவபாலேஸ்வரராசா தர்மபுரம் அரசினர் வைத்தியசாலைக்கும், அளவெட்டி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் வி.யோகேஸ்வரன் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கும், சங்கானை அரசினர் வைத்தியசாலை டாக்டர் ஈ.செல்வநாயகம் அக்கராயன்குளம் அரசினர் வைத்தியசாலைக்கும் -

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் பி.சிவலோகநாதன் பளை அரசினர் வைத்தியசாலைக்கும், கரவெட்டி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.வேலாயுதம் அளவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கும், கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் கே.திருஞானசம்பந்த மூர்த்தி கரவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கும் -

இணுவில் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ஜானகி நித்தியானந்தன் உடுவில் அரசினர் வைத்தியசாலைக்கும், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை டாக்டர் திருமதி கிருபாதேவி செல்வராசா சங்கானை அரசினர் வைத்தியசாலைககும், யாழ்.மார்பு நோய் சிகிச்சை நிலைய டாக்டர் பாரததேவி புவனேஸ்வரி இணுவில் அரசினர் வைத்தியசாலைக்கும் -

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன்குளம் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எஸ்.அருள்நேசன் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கும், டாக்டர் திருமதி சந்தியா அருள்நேசன் உரும்பிராய் அரசினர் வைத்தியசாலைக்கும், திருகோணமலை நிலாவெளி அரசினர் வைத்தியசாலை டாக்டர் எஸ்.சோதிமயம் வல்வெட்டித்துறை அரசினர் வைததியசாலைக்கும் -

மட்டக்களப்பு ஆரயம்பதி வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் கே.இராமலிங்கம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கும் எதிர்வரும் ஜனவரி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்ற அறிவித்தல் யாழ்.சுகாதார திணைக்களத்திற்கும் இவ்வாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (எ-135)

### மல்லாகம் விசாலாட்சியின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.29

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் மேலைத்தேய வாத்திய அரங்கேற்ற விழாவும் இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் ந.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் தெல்லிப்பழை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரபாலன் முதன்மை விருந்தினராகவும், வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன், தெல்லிப் பழைக் கல்விக் கோட்ட முதன்மை ஆசிரியர் திருமதி இ.இராமலிங்கம் மற்றும் மல்லாகம் மத்தி கிராம உத்தியோகத்தர் சு.பூபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

ஆசியுரையை சிவத்திரு. அ.குமாரசாமி ஐயா நிகழ்த்துவார். (எ-5)

# சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தாதிருக்க அரசு முடிவு

## நிதியமைச்சர் சொக்ஸி நாடாளுமன்றத்தில் அறிவிப்பு

திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசுகள நடைமுறைப்படுத்தப்பட்டால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படலாம் என்பதால் அச்சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தாதிருக்க அரசு தீர்மானித்திருக்கிறது. நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி நேற்று நாடாளுமன்றத்தில் இதனை அறிவித்தார்.

அடுத்த ஐந்து வருட காலத்தில் அரச சேவை ஊழியர்களின் எண்ணிக்கையில் 35 சதவீதத்தை - அதாவது ஒன்றரை லட்சம் ஊழியர்களை - ஆளகுறைப்புச் செய்யவேண்டும் என்பது அந்த ஆணைக்குழுவின் ஒரு முக்கிய சிபாரிசாகும்.

அவ்வாறு செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும். அரச சேவையில் பிரச்சினைகள் ஏற்படும். அதனால் அந்த ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதில்லை என்று அரசு தீர்மானித்திருக்கிறது எனவும் நிதியமைச்சர் சபையில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை அவர் இது தொடர்பாக நேற்று விடுத்தார்.

ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அரசு ஏற்றுக் கொண்டிருப்பது வரவு - செலவுத் திட்ட உரையின் மூலம் தெரிகிறது என்று ஆணைக்குழுவின தலைவரான திஸ்ஸ தேவேந்திர பத்திரிகைச் செய்தியொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில அறிக்கை விடுத்த நிதியமைச்சர் சொக்ஸி, சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசுகள் - நடைமுறைப்படுத்தப்படுமேயானால் அது நாடாளுமன்றத்தின் ஊடாகவே செய்யப்படும் எனவும் கூறினார். (ஐ)

# நல்லூர் பொதுச் சந்தையில் புதிய கட்டட வேலைகள்

நல்லூர்,நவ.29

நல்லூர் பொதுச் சந்தையில் (கல்வியங்காடு சந்தை) புதிய கடைத தொகுதி ஒன்றை நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய கடைத் தொகுதிக்கான அத்திவாரத்தை அமைப்பதற்காக சந்தையில் அமைந்திருந்த மற்றொரு கட்டடம் இடித்து அழிக்கப்பட்டுவருகிறது.

போதிய கடைகள், கட்டடவசதிகள் இன்றிக்காணப்படும் கல்வியங்காடு சந்தையில் புதிய கடைத் தொகுதிக கட்டடம் ஒன்றை அமைக்க கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, ந.ரவிராஜ் ஆகியோர் சுமார் 6 லட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தனர். இந்த நிதி கட்டடத்தை நிறுவப் போதாது என்று வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். எனினும் இந் நிதியைக் கொண்டு ஆரம்பகட்ட வேலைகளை மாநகரசபை ஆரம்பித்திருக்கிறது. (ஐ-பி)

### 5 இலங்கை மீனவர்கள் கேரளாவில் கைது!

இந்திய கடற்பிரதேசத்தில் சட்டவிரோதமாக மீன்பிடித்தனர் என்று இலங்கை மீனவர்கள் ஐவர் கேரள கடலோர காவல் படையினரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

லட்சத்தீவுகள் கடலில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டனர் எனவும் - அவர்கள் பிடித்திருந்த மீன்களையும் வலைகளையும் கேரள காவல் படையினர் கைப்பற்றினர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. எர்ணாகுளம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 14 நாள்கள் காவலில் வைக்கப்பட்டனர். (ஐ)








மட்டக்களப்பு தரவையில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று முன்தினம் நடந்த மாவீரர்தின இறுதிநாள் நிகழ்வில் மட்டு. - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா பொதுச்சுடர் ஏற்றுவதை முதல் படத்திலும் -

அங்குள்ள மாவீரர் நினைவுக் கற்கள் மற்றும் அங்கு இடம்பெற்ற அணிவகுப்பு காட்சிகள் ஆகியவற்றை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள்:-தமிழ்நெற்)*

# முல்லைக் கடற்கரையில்.....



கடற்புலிகளின் போர்ப் படகுகளின் அணிவகுப்பு....



பரந்து விரிந்து கிடக்கும் ஈழப் பெருங்கடலில் அலைகளைக் கிழித்து எதிரியைக் கலங்கடித்த கடற்புலிகளின் போர் படகுகள் அணிவகுத்துச் செல்லும் காட்சியையும் அவை அலைகடலில் நிகழ்த்திய சாகசங்களையும் காணலாம்.



போர்ப் படகுகளின் அணிவகுப்புக்கு மரியாதை செலுத்தி கரையோரத்தில் அணிவகுத்து நின்ற கடற் கரும்புலிகள், கடற்புலிகள், கடற்புலிகளின் சிறப்புப் படையணி வீரர்கள்....



முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலிருந்து போர் படகுகளின் அணிவகுப்பு நடைபெற்ற முணற்குடியிருப்பு நோக்கி கடற்புலிகளின் அணிவகுப்பு சென்ற சமயம் எடுக்கப்பட்ட படம்.





கடலில் சுச்சுடர் ஏற்றுவதற்காகக் கரையிலிருந்து மெய்க்காவலர்கள் சகிதம் படகில் புறப்படும் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை (நடுவில்).

படங்கள்: பிரேம்



கடற்சமரின் நாயகர்களான கடற்கரும்புலிகள் அணிவகுத்துச் செல்கின்றனர். எந்தவித உருமறைப்புக்களும் இன்றி அவர்கள் இந்த அணிவகுப்பில் கலந்துகொண்டது சிறப்பம்சமாகும். இவ்வாறு கடற் கரும்புலிகள் பொது மக்கள் முன் பகிரங்கமாகத் தோன்றுவது இதுவே முதற்றடவை. குடாரப்பு கரையில் நடந்த அணிவகுப்பில் இவர்கள் முகத்தை மூடிக் கட்டியவாறு கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அணிவகுப்பைக் காண கரையோரத்தில் திரண்டிருந்த மக்களில் ஒரு பகுதியினர்....



# வாய்க்கால் புனரமைப்பு இல்லை; வயல்களில் வெள்ளம் தேக்கம்

வரணி,நவ.29

குடாநாட்டில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெய்த கடும்மழை காரணமாக வரணி, மாவில் பிரதேசத்தில் சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழியும் நிலையில் உள்ளன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி வயல்களில் தேங்கும் மழை நீர் பாய்ந்து செல்வதற்காக அமைக்கப்பட்ட கரவில்-பழுதனை வாய்க்கால் புனரமைக்கப்படாமையே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாய்க்காலை புனரமைத்துத்தருமாறு மாசேரி விவசாய சம்மேளனம் சம்பந்தப்பட்டவர்களிடம் பல்வேறு தடவைகள் கோரிக்கை விடுத்தும் -

இதுவரை உரிய நட வடிக்கை எடுக்கப்படவில்லை எனக்கூறப்பட்டது.

கரவில்-பழுதனை வாய்க்கால் கடந்த 25 வருடங்களாகப் புனரமைக்கப்படவில்லை. (எ-170)

## முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கு

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரிவில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை முதல் நான்கு நாள்களுக்கு மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் காலை 7.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்படவுள்ள இக் கருத்தரங்கில் இப்பிரிவைச் சேர்ந்த சகல முன்பள்ளி ஆசிரியர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சி. சிவனேசன் கேட்டுள்ளார். (எ-29)

## லங்கா சிமெந்து துறைமுக ஊழியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

காங்கேசன்துறை லங்கா சிமெந்து துறைமுக ஊழியர் சங்கத்தில் இருந்து சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெற்றவர்களும் வயதெல்லையை அடைந்து ஓய்வுபெற்றவர்கள் உட்பட சகல உறுப்பினர்களையும் 01.12.2002 ஞாயிறு அன்று காலை 9.00 மணிக்கு இணுவிலிலுள்ள லங்கா சிமெந்து நிறுவன காரியாலயத்தின் முன் ஒன்றுகூடுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

இவ்வொன்றுகூடலில் முக்கியமாக நிர்வாகத்தினால் எமக்கு இன்னமும் வழங்கப்படவேண்டிய 50% சம்பள நிலுவை, மற்றும் முற்றாக செலுத்தப்படாதிருக்கும் 39 மாத சம்பள நிலுவையையும் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, இது தொடர்பாக தங்களிடமுள்ள சகல ஆவணங்களுடன் அனைவரும தவறாது சமுகந்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(11131) D.தேவசகாயம்

## துயர் பகிர்தல்

### செல்வி வீரசிங்கம் தமிழினி

கொழும்பு பிறவுண்சன் இண்டஸ்றஸ் உரிமையாளர் வேலணை வீரசிங்கம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அருந்தவப் புதல்வியும், விஞ்ஞானப்பட்டதாரியும், கவிதை, கட்டுரை எழுதும் ஆற்றல் பெற்றவரும், நடனம் பயின்று அத்துறையில் ஆசிரியையாகப் பணியாற்றியவரும், கணனிப் பொறியியல் துறையில் பயின்று பட்டதாரியாகும் பக்குவம் பெற்றவரும், தந்தையின் பகுத்தறிவுப் பாதையில் நடந்த சிந்தனையாளரும், தாயாரின் மனையியல், செயற்திறன், உற்றாரை இன்முகத்துடன் உபசரிக்கும் நலன்களைப் பெற்றிருந்தவருமான

செல்வி தமிழினி வீரசிங்கம் அவர்கள்

23.11.2002இல் அகால மரணமெய்தியமை அறிந்து திடுக்குற்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் பெற்றோர், உடன் பிறப்புக்கள், உற்ற உறவினர்கள், நண்பர்கள் அனைவரோடும் எமது ஆழ்ந்த துயரையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

84/3, மானிப்பாய்ச் சாலை, யாழ்ப்பாணம். - வரதர் குடும்பத்தினர். (C/25117)

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய

### கனகசிங்கம் சண்முகதாஸ்

அவர்கள் 21.11.2002 வியாழக்கிழமையன்று அகால மரணமடைந்ததை யிட்டு அன்னாரின் பிரிவுத் துயரில் பங்குகொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம்.
மல்லாகம். (11139)

## ஒளி விழா

குருநகர்,நவ.29

யாழ்புனித ஜேம்ஸ் மகளிர் றோ.க பாடசாலையின் ஒளிவிழா இன்று காலை 10 மணிக்கு அதிபர் திருமதி லூ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

குருநகர் பங்குத்தந்தை வண.பிதா அபி.ஜெயசேகரம் அடிகள் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஒ-51)

## ரூபா 40 லட்சத்துடன் ஹெரோயின் வியாபாரி கைது!

ஹெரோயின் போதைவஸ்து விற்பனை தொடர்பாக மற்றுமொரு முக்கிய நபர் 40 லட்சம் ரூபா பணத்துடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

அவிசாவளைப் பகுதியில் உள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்த பொலீஸார் ஹெரோயின் வியாபாரி எனச் சந்தேகிக்கப்படும் அந்த நபரை பணத்துடன் கைது செய்துள்ளனர்.

நாலரைக்கோடி ரூபா பெறுமதியான 18அரை கிலோ ஹெரோயின் அவிசாவளை, வெல்லம்பிட்டி போன்ற பகுதிகளில் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே. மூன்று சந்தேக நபர்களும் அப்போது கைது செய்யப்பட்டனர். (ஐ)

## சாவற்கட்டில் ஐஸ்தொழிற்சாலை விரைவில்

நவாலி,நவ.29

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சாவற்கட்டு கிராமத்தில் ஐஸ் உற்பத்தி நிலையமொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அண்மையில் இப்பகுதிக்கு விஜயம் செய்த நோறாட் நிறுவன அதிகாரிகள் குழுவினர் இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தனர். பின்னர் ஐஸ் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கும் மின் பிறப்பாக்கி ஒன்றை வாங்குவதற்கும் ஒருகோடி ரூபாவினை ஒதுக்கியுள்ளனர். இத்தகவலை சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நா.பொன்னம்பலம் தெரிவித்தார். (ஒ-100)

## கட்டட நிர்மாணத்துக்கு நிதியுதவி வழங்குமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய்,நவ.29

மானிப்பாய் சென்ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக நிறுவுவதற்கெனத் திட்டமிடப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டடத்துக்கு நிதி உதவி வழங்கி உதவுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் மற்றும் யாழ்.மாவட்ட எம்.பிகளிடமும் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த ஆண்டில் மேற்படி மாடிக் கட்டடத்துக்கான ஆரம்ப அடித்தள வேலைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாததினால், கட்டட வேலைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாதுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். (எ-135)


## விற்பனைக்கு

கீத், ஆராதனா, ஜோலே ஆகிய CD திரைப்படங்கள் எம்மிடம் உண்டு. பிரதிக்கு முந்துங்கள்

கறுப்பு, பிறவுண், வெள்ளை பொமனேரியன் நாய்க்குட்டிகள் (பூச்சி நீக்கியது). வெளிநாட்டுப் பறவைகள் விற்பனைக்கு உண்டு.

முகவரி:
மணிக்குரல் விளம்பர சேவை
167, வயிரவர் கோயிலடி,
ம.நவீன சந்தை, யாழ். (11136)

பிரத்தியேக வகுப்புகள்
வணிகக்கல்வியும் கணக்கீடும்
புதிய பிரிவுகள்
O/L - 2003
Grade - 10
A/L 2004 வங்கி இணக்ககூற்று
A/L 2003 கிரய கணக்கீடு
ஆரம்பம்: 02.12.2002
திங்கள் காலை 6.30 a.m.
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஆசிரியர்:
க.அற்புதராஜா (B.Com)
கொக்குவில் மேற்கு. (11130)



PRESIDENT®



CFL
பல்புகள், சர்வதேச அங்கீகாரம் பெற்ற
80% மின்சார சேமிப்ப 1 வருட
உத்தரவாதத்துடன் வழங்கு றது
போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்
CEB இன் அங்கீகாரம் பெற்று
இலகு தவணை முறையில் கிடைக்கின்றது.
JAFFNA ELECTRICALS
ISO 9002
No. 06, Stanley Road, Jaffna.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

### ஜேம்ஸ் பிரான்சிஸ் சேவியர்

(கிராம அலுவலர், புங்குடுதீவு கிழக்கு J/23) அவர்கள் யாழ்.மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி தேவி இளங்கோவன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பட்டம் பெற்றதையிட்டு அவரை பதினாறும் பெற்று பல்லாண்டு காலம் வாழவும், அவரது சேவை தொடரவும் வாழ்த்துகின்றோம்.

கி.மல்லிகாதேவி,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
புங்குடுதீவு கிழக்கு J/23.

(11118)

## கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1945 - 01 - 02 |  | 2002 - 11 - 27 |

### அமரர் கணபதி முருகன் சிவகுரு

*(கிராம உத்தியோகத்தர், யா/332 கெற்பெலி)*

27.11.2002 புதன்கிழமை பகுதிநாள் கூட்டத்திற்குச் செல்லும் சந்தர்ப்பத்தில் க.மு.சிவகுரு அவர்கள் சாவகச்சேரியில் வாகன விபத்தில் அகாலமரணமடைந்த செய்திகேட்டு நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*68, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.* (11116)

யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



27.11.2002 அன்று அகாலமரணமான
கெற்பெலி கிராம அலுவலரும்,
கைதடி மத்தி சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்
திரு.சி.அகிலதாசனின்
தந்தையாருமான

### அமரர் முருகன் சிவகுரு

அவர்களின் அகால மரணச்செய்தியால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், தென்மராட்சி. (C/25113)

பிரதேச செயலக நலன்புரிச்சங்க ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்

### பூபாலன் தங்கம்மா

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பூபாலனின் அன்பு மனைவி திருமதி பூபாலன் தங்கம்மா அவர்கள் நேற்று(28.11.2002) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் அமரர் கதிர்காமு சாமியாரின் அருமைச் சகோதரியும் மீனாம்பிகை, கமலாம்பிகை, சண்முகானந்தன்(கணக்காய்வாளர்-முல்லைத்தீவு, கச்சேரி), அம்பிகை, தேவகி, சிவானந்தன்(ஆசிரியர்-பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), விஜயலட்சுமி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சண்முகநாதன் (இலங்கை மின்சாரசபை-வட்டுக்கோட்டை), கமது, குணபாலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாமினி, ஜனார்தனன், விசாகன், குகசீலன், வாசுகி, நிவேதா, சங்கீத், மதுஷா, திவ்யா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(29.11.2002) வெள்ளிக்கிழமை மாலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஆனைக்கோட்டைச் சந்தி, ஆனைக்கோட்டை.* (11137)

தகவல்: சி.சண்முகநாதன் *(மருமகன்)*.

உதயன்

## தலைவர் பிரபாகரனின் உரை தரும் செய்தி

உலகம் முழுவதும் மிகவும் ஆவலோடு எதிர் பார்த்திருந்த மாவீரர்நாள் உரையை பிரபாகரன் நேற்றுமுன்தினம் மாலை நிகழ்த்திவிட்டார்.

புலிகள் இயக்கத்தின் கொள்கைகள், இலட்சியம், போராட்டம், சமாதான முயற்சிகள் பற்றி எல்லாம் பலதரப்பினரிடையே இருந்து வரும் சந்தேகங்களை நீக்கும் வகையில் பிரபாகரனின் உரை அமைந்திருந் தது.

சமாதானத்தில் தமக்குள்ள பற்றுறுதியையும் தற்போது அரசுக்கும் தமது இயக்கத்துக்குமிடையே நடைபெற்றுவரும் பேச்சுக்கள் வெற்றிபெறவேண் டும் என்பதில் தமக்குள்ள ஆர்வத்தையும் பிரபாகரன தனது உரையில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

முன்னைய அரசுகள்போல் அல்லாமல் இன்றைய ரணில் விக்கிரமசிங்க அரசு, நேர்மையுடனும் துணி வுடனும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முனைகிறது என்று பிரபாகரன் வாய்விட்டுக் கூறியிருக்கிறார்.

போர்நிறுத்தம், சர்வதேச கண்காணிப்புக் குழு வின் முயற்சிகள், நோர்வே அரசின் அனுசரணை என்றுமில்லாதவாறு சர்வதேச அரசுகள் சமாதான முயற்சிகளில் காட்டிவரும் அக்கறை, ஆர்வம் ஆகி யன அரசின் நடவடிக்கைகளுக்கு வலுச் சேர்ப்பதோடு நம்பிக்கையையும் ஊட்டுகின்றன என்றும் பிரபா கரன் தெரிவித்திருக்கிறார்.

"எமது மக்கள் தமது தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆட்சிபுரியும் உரிமையுடையவர்களாக, சுதந் திரத்துடன் கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது இலட்சியம். இந்த இலட்சியம் சமாதான வழி யில் கைகூடுமானால் அந்த வழியைத் தழுவ நாம் என்றுமே தயார்" என்று பிரபாகரன் தெரிவித்திருக் கிறார்.

"நம்பிக்கையூட்டும் நல்லெண்ண சூழ்நிலையில் முன்னேற்றமடைந்துவரும் அரசு - புலிகள் பேச்சுக் கள் வெற்றிபெறவேண்டும் என்பதும், இத்தீவில் வாழும் சகல சமூகத்தினரும் ஒற்றுமையாகவும் ஒத்திசைவாகவும் ஒன்றுகூடி வாழவேண்டும் என் பதுமே எமது ஆழமான அவா. சமாதானப் பேச்சுக் களைச் சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பிவிடும் துரோக நிகழ்வு நடந்தால் அது தமிழ் மக்களைத் தனியரசுப் பாதையில் இட்டுச் செல்வது திண்ணம்" என்று சிங்கள மக்களுக்கும் ஒரு செய்தியைத் தெரிவித்திருக்கிறார் பிரபாகரன்.

"தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் சுதந் திரமாக, கௌரவமாக வாழவிரும்புகிறார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகிறார் கள்.

"தமது தாயக மண்ணில் தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகிறார்கள். இதுவே எமது மக்களின் அபிலாஷை.

"உள்ளான சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில்தான் அடங்கியிருக்கிறது.

"உள்ளான சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்ப டையில் எமது தாயக நிலத்தில் எமது மக்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதி காரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால், நாம் அத்திட்டத்தை சாதகமாகப் பரிசீலனை செய்வோம்.

"சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்துசென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழி யில்லை"

இது பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் அரசுக்கு விடுத்திருக்கும் செய்தி.

ஆக, ஆயுதப் போராட்டம் நடத்தித்தான் தமிழ்மக்களின் உரிமைகளை பெறவேண்டும் என்ற நிலைப்பாட்டில் புலிகள் இல்லை.

நாட்டைப் பிரிப்பதோ, தனிநாடு அமைப்பதோ புலிகளின் நோக்கமல்ல.

தமிழர்கள், ஒரே நாட்டில், தங்கள் தாயக மண ணில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பூரண சுயாட் சியைப் பெற்று, நாட்டின் ஏனைய எல்லா இன மக களுடனும் ஒற்றுமையாகவும் ஒத்திசைவாகவும் வாழ வழிசெய்யும் செயற்பாட்டிலேயே புலிகள் ஈடு பட்டிருக்கிறார்கள் என்பதை பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் தெளிவுபடுத்திவிட்டார்.

போர் இன்றி, பிரச்சினையின்றி சமாதான சூழ் நிலையில் நாட்டு மக்கள் எல்லோரும் நல்வாழ்வு வாழ்வது அரசு மற்றும் சிங்கள மக்களின் கைகளில் தான் தங்கியிருக்கிறது என்ற செய்தி பிரபாகரனு டைய உரையின் அடிநாதமாக விளங்குகிறது.

### விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்கள்

# சில பாடஅலகுகளை தவிர்ப்பதால் மாணவர் கல்வி பாதிப்படைகிறது!

## கருத்தரங்கில் வைத்திய கலாநிதி கவலை

மண்டைதீவு,நவ.29

பாடசாலைகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் சில பாட அலகுகளைத் தவிர்த்துவிடுவதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. அத்துடன் பரீட்சை பெறுபேற்றிலும் பின்னடைவு ஏற்படுகிறது.

கடந்த வார இறுதியில் யாழ்.மத்திய கல்லூரியில் நடை பெற்ற தீவக வலய அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய வைத்திய கலாநிதி சிவசங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

தீவக வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜி.வி.இராதாக் கிருஸ்னண் தலைமையில் நடந்த இந்தக் கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விஞ்ஞான பாடத்திட்டத்தில் 'இனப்பெருக்கத் தொகுதி' போன்ற பாடஅலகுகளை சில ஆசிரியர்கள் கற்பிக்காது ஒதுக்கிவிடுகின்றனர். வேறு சிலர் மேம்போக்காக கற்பிக்கின் றனர். இது மாணவரின் கல்வி செயற்பாட்டுக்கு ஆரோக்கிய மானதாக அமையவில்லை என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலான ஆசிரியைகள் இளையவர்களாகவும், கூச்ச சுபாவம் கொண்டவர்களாகவும் உள்ளனர். பல பாடசாலைகள் இருபாலாரையும் மாணவர்களாகக் கொண்டுள்ளன. இவை இந்த நிலைமைக்குக் காரணமாகும். மாணவர்களும் அதீத கூச்ச உணர்வை வெளிப்படுத்துவதும் இதற்கு மற்றுமொரு காரணமாகும்.

ஆனால், குறைந்த புள்ளிகளை பெறும் ஒரு மாணவன் இந்தப் பாட அலகுகளை கற்பதன் மூலம் அதிக புள்ளிகளை பெற்று சித்தியடையக் கூடும்.

இந்தப் பாட அலகு ஒரு மாணவனுக்கு ஆர்வத்தை ஏற் படுத்துமாயின் அவை சித்[illegible]ப் புள்ளியைப் பெறக்கூடும். எனவே, இந்தப் பா[illegible]பகுதிகள் தவிர்க்கப்படக்கூடாது.

எமது சனத்தொ[illegible]யில் 40வீதமானவர்கள் மாணவர்கள். இவர்கள் அனை[illegible] இங்கு இருக்கப்போவதில்லை. இவர் களுள் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டிற்கோ, கொழும்பு போன்ற நகரப் பகுதிகளுக்கோ செல்வார்கள். அங்கு திடீரென புதிய அனுபவத்தை சந்திப்பதால் இவர்கள் சிக்கலில் மாட்ட நேரிடுகிறது. பாலியல் கல்வி இல்லாத காரணத்தினால் பாலியல் பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.

எமது சமூகத்தில் உள்ள பாலியல் பற்றிய முரண்பாடு களே இதற்குக் காரணம். சமூகத்தில் இது எதிர்மறையாக கருதப்படுகிறது. சாதகமான மனப்பாங்கு இல்லாததால் பிரச் சினைகளை அணுக முடியாதுள்ளது. எதிரிடையான மனப் பாங்குகள் சமூகத்தில் வாழ்வதால் தகவல்களை முன்வைக்க இய[illegible]

[illegible]தில் முன்னைய காலத்தில் மாற்று வழி கள் [illegible] அறிவு முன்வைக்கப்பட்ட போதிலும் அது பிர[illegible]தல் விரசமாக்கப்பட்டமை கவலைக்குரியதே.

எமது இளம் தலைமுறையினரால் பாலியல் பிரச்சினை களை பொருத்தமான முறையில் அணுக இயலாதிருப்பதற்கு எமது கலாசாரத் தடைகளே காரணமாகவுள்ளன - என்றார் அவர். (ஓ-88)

## மக்களிடம் சிக்கியோரில் மூவருக்கு விளக்கமறியல்

அச்சுவேலி,நவ.29

ஆவரங்கால் பகுதியில் நள்ளிரவில் சந்தேகத்தின் பெயரில் பொதுமக்களினால் பிடிக்கப்பட்ட ஏழுபேரில் மூவர் நீதிமன்ற உத்தரவையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி - ஆவரங்கால் பகுதியில் நடைபெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பொதுமக்களினால் பிடிக்கப்பட்ட ஏழுபேர் அச்சுவேலிப் பொலீ ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

பொலீஸார் மேற்கொண்ட விசாரணையில் அவர்களில் சிலர் அச்சுவேலி - ஆவரங்கால் பகுதியில் நடைபெற்ற திருட் டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்பது தெரிய வந்தது.

திருடப்பட்ட நகைகள் மற்றும் பொருள்கள் யாழ்.குடாநாட் டிற்கு வெளியே கொண்டுசெல்லப்பட்டிருப்பதும், சம்பவத்துடன் தொடர்புடைய வேறு நான்கு பேர் வன்னிப்பகுதிக்குச் சென்று தலைமறைவாகி இருப்பதும் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அச்சுவேலிப் பொலீஸாரினால் மல் லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சந்தேக நபர்களில் நாகமணி சசிகுமார்(உரும்பிராய்), மகாலிங்கம் லிங்கம்(சிறுப் பிட்டி), சின்னத்துரை நிசாந்தன்(மணற்பகுதி புத்தூர்) ஆகிய மூவரும் அடுத்த மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஓ-11)



சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் தல விருட்சமான, நீண்ட காலப் பழைமைமிக்க ஆலமரம் அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக பாறி வீழ்ந் திருப்பதைப் படத்தில் காணலாம். (எ-17)

## ஒலிபெருக்கிகளின் சத்தத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

### மாநகர சபை மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பொது இடங்கள் பொது வீதிகள், விற்பனை நிலையங்கள். மற்றும் வீடுகளில் இயங்கும் வானொலி மற்றும் ஒலிபெருக்கிகளின் ஒலிச்செறிவு இருபது டெசிபெல்லுக்கு (20dB) மேற்படலாகாது என்று யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது.

வானொலி மற்றும் ஒலிபெருக்கிகளின் சத்தம் கட்டுப்பாடின்றி உச்ச அளவுகளில் இருப்பதனால் -

மாணவர்கள் தமது கல்வியில் முழுமையாக ஈடுபடமுடி யாமலும் -

பொதுமக்கள் அமைதியின்றித் தொல்லைப்படவும் -

வழியேற்படுகிறது என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமை ஏற் படுவதைத் தவிர்க்கும் நோக்கு டன் வானொலி, ஒலிபெருக்கி களின் ஒலியளவு இருபது டெசி பெல்லுக்கு உட்பட்டதாக இருப் பதை அனைவரும் உறுதி செய்து கொள்ளவேண்டுமென அவர் கேட்டுள்ளார். (ஓ-9)

**நாளை**

கார்த்திகை 14
சனிக்கிழமை
(30.11.2002)
திதி : ஏகாதசி
முன்னிரவு 10.29 வரை.
நட்சத்திரம்: அத்தம்
மாலை 5.42 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 3.14 - 4.44
ராகுகாலம் : 9.14 - 10.44
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

அச்சமே மரணம். அச் சுந்திறகப்பால் நீ போக வேண்டும்.

## யாழ். பண்ணைப் பகுதியில் கொட்டப்படும் கழிவுகள்

கொழும்புத்துறை,நவ.29

யாழ்.பண்ணைப் பகுதியில் மீன்சந்தை மற்றும் பஸ்நிலை யம் ஆகியவை அமைக்கப்பட்டுவரும் பகுதிக்கு முன்பாக உள்ள வெளியில் உழவு இயந்திரங்கள்மூலம் குப்பைகள், கழிவுப்பொருள்கள் கொட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இப்பகுதியில் யாழ். தபாலகம், மீன்சந்தை மற்றும் பஸ் நிலையம் என்பன புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவருகின்றன. இவை கட்டிமுடிக்கப்பட்ட பின்னர் இவ்விடங்களில் அதிக மக்கள் நடமாட்டம் இருக்கும் அவ்வேளையில், இச்சேதனக் கழிவுகள் அப்பகுதிக்கு வரும் மக்களுக்கு பாரிய சுகாதாரச் சீர்கேட்டைத் தோற்றுவிக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. (ஓ-30)

### 12 வருடங்களின் பின்னர்

## பண்ணைப் பாலம் ஊடான கடற்றொழிலுக்கு அனுமதி

நவாலி,நவ.29

கடந்த 12 வருடங்களின் பின்னர் பண்ணைப் பாலத்தினூடாக கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலைகள் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து இப்பாலத்தி னூடாகச் சென்று தொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட் டிருந்தது.

பண்ணைப் பாலத்தினூடாகச் சென்று தொழில் செய்ய அனுமதிக்குமாறு சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் கடற்றொழில், நீரியல் வளத்துறை உதவிப் பணிப் பாளருடாக விடுத்த கோரிக்கையை அடுத்து இதற்கான அனு மதி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து மீனவர்கள் தற்போது பாரிய வள்ளங்கள்மூலம் தூர இடங்களுக்குச் சென்று தொழில் செய்து வருகின்றனர். (எ-100)

## சபரிமலை செல்வோருக்கு விசேட அடையாள அட்டைகள்

### இந்து கலாசார அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.29

சபரிமலை ஐயப்பன் தலத்துக்கு யாத்திரை செல்லும் பக்தர்களுக்கென இந்து கலாசார அமைச்சினால் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பக்தர்கள் அதற் குரிய விண்ணப்பப் படிவங்களை அமைச்சின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன், அடுத்த ஆண்டு மே மாதம் கொழும்பில் நடை பெறவுள்ள உலக இந்து மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளோ ருக்கான விண்ணப்பப்படிவங்களும் பிராந்திய அலுவலகத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்றும் -

தேவையானோர் 20 ரூபா பணத்தைச் செலுத்தி விண்ணப் பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (எ-10)

# MATHS CENTRE
NELLIADY

## 2003 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள்

* Gr.4 தொடக்கம் 11 வரை
* விசேட புலமைப்பரிசில் வகுப்பு

ஆசிரியர் **சிவசுப்பிரமணியம்**

* அனுமதிகள் புதிய மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

(பெற்றோருடன் வரவும்)

ஆரம்பம்:- 30.11.2002 சனி பி.ப. 2.30 (ப.நே.)

(C/25094)


## பிளாஸ்ரிக் கதிரை அன்பளிப்பு

சண்டிலிப்பாய்,நவ.29

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையின் பாவனைக்காக கொழும்பிலுள்ள 'தம்ரோ' நிறுவனம் 15 பிளாஸ்ரிக் கதிரைகளை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைதகியசாலைகளுக்கு 500 பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் இக்கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-135)

## கண்ணீர் அஞ்சலி

மெமோறியல் அன்னையின் பழைய மாணவனும் பழைய மாணவர் சங்க உறுப்பினர் **திரு.த.ஆனந்தரூபனின்** சகோதரனும் மெமோறியலின் வளர்ச்சியில் பலவித அர்ப்பணிப்புக்களையும் செய்த கட்டட ஒப்பந்தகாரர் **அமரர் தருமலிங்கம்** அவர்களின் மூத்த புதல்வனும், ஆனந்தா வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான

### தருமலிங்கம் தர்மசீலன்

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து அன்னாரின் குடும்பத்தினருடன் நாமும் துயர்பகிர்கின்றோம். ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மெமோறியல் குடும்பம்
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை.

(11119)

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்தினால் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும்

## உலக எயிட்ஸ் தின ஓவியப் போட்டி

மேற்படி ஓவியப் போட்டியை பாடசாலைகளுக்கிடையே நடத்த ஒத்துழைக்குமாறு கோரி வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு எம்மால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப்போட்டி எதிர்வரும் 2002.12.01 இல் யாழ். மத்திய கல்லூரியில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். பங்குபற்றும் மாணவர்கள் 13 - 18 வயது வரை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்களுக்கு தேசிய மட்டத்தில் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டிக்கான வரைபடத்தாள்களும், தூரிகையும் மாணவர்களால் எடுத்துவரப்படல்வேண்டும். வர்ணங்கள் (PAINTS) எம்மால் வழங்கப்படும்.

செஞ்சிலுவைச் சேவையில்,
கௌரவ தலைவர்.

*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,*
*யாழ்ப்பாணம்.*

(C/25112)

---

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் நல்லதம்பி செல்லையா

*(வரதீவு, 7ஆம் வட்டாரம், புங்குடுதீவு)*

வையக விளைவு: 20.07.1923
வானக நுழைவு: 30.10.2002

அன்பின் உறைவிடமே!
அல்லும் பகலும் எமக்காகப் பாடுபட்டு
எம்மைக் காத்த தெய்வமே!
நாள்கள் எத்தனை கடந்தாலும்
உம் நினைவுகள் எங்கள் நெஞ்சைவிட்டு
என்றும் அகலாது.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசிமூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (29.11.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பாணாவிடை சிவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*தகவல்:*
து.குருநாதசிவம்
*(சிவா நறுமணப்பூங்கா)*
*பொன்னையா லேன்,*
*ஆனைக்கோட்டை,*
*யாழ்ப்பாணம்.*

(C/25104)



---

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் J/332 கெற்பெலி பிரிவு கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

### கணபதி முருகன் சிவகுரு

அவர்கள் பகுதிநாள் கூட்டத்துக்குச் சமுகமளிக்க வந்த வேளை சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைப் பணிமனைக்கு அருகில் வாகன விபத்தில் அகால மரணமடைந்த செய்தி கேட்டு சக கிராம உத்தியோகத்தர்களாகிய நாம் ஆறாத் துயரடைகின்றோம். இந்த அதிர்ச்சி நிலையிலும் அன்னாரது குடும்பத்தவர்கள் மனம் தளராது இருக்க எல்லாம்வல்ல இறைவன் துணைபுரியவும் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கிராம உத்தியோகத்தர்கள்.

*பிரதேச செயலகம்,*
*சாவகச்சேரி.*

(11117)






யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குவைத் நாட்டுக்கான புதிய தூதுவர் ஏ.ஆர்.மன்சூர் உரைநிகழ்த்துவதை முதலாவது படத்திலும், வருகை தந்த தூதுவர்கள், தூதரக அதிகாரிகள் மற்றும் படை அதிகாரிகளை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: வசந்தன்)

# குடாநாட்டு நிலைவரத்தை கண்டறிவதே எமது நோக்கம்!

## குவைத்தின் தூதர் ஏ.ஆர்.மன்சூர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

குடாநாட்டில் தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்துகொள்ளவும், சீரமைக்கப்பட்டுவரும் யாழ். பொது நூலகத்தைப் பார்வையிடவுமே நாங்கள் வருகைதந்தோம்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த முன்னாள் அமைச்சரும் குவைத்துக்கான இலங்கைத் தூதரகத்தின் புதிய தூதுவருமான ஏ.ஆர்.மன்சூர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இயங்கும் இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் தூதுவர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது. இந்தக் குழுவினர் யாழ்.பொது நூலகத்தைச் சென்று பார்வையிட்டதுடன் அங்கு முதல்வர் செ.கந்தையன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்ற அனைத்து மக்களும் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்பதையே மனதார விரும்புகின்றனர். இன, மத, மொழி என்ற வேறுபாடின்றி சமாதானத்துக்காக அனைவரும் அயராது உழைத்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்தக் கூட்டு முயற்சியின் பலனாக நாட்டில் நிச்சயம் சமாதானம் ஏற்படும். அதற்காக நாம் அனைவரும் பிரார்த்திப்போம் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம், மாநகர உறுப்பினர்களான த.சுபத்திரன், செ.இருதயராஜன், மு.தவநாதன், முன்னாள் அமைச்சர் யு.பி.விஜயக்கோன், யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, யாழ்.மாவட்டப் படைகளின் துணைத் தளபதி மேஜர் ஜெனரல் ஆர்.இரத்தின சபாபதி, கேணல் ரூபசிங்க, கேணல் டிசில்வா மற்றும் மாநகரசபை கட்டடத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (எ-10-5)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத்தின பேச்சு, கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.29

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசையை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே யாழ்.சைவ பரிபாலனசபையினால் நடத்தப்பட்ட பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில வெற்றி பெற்றோர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

மேற்பிரிவு:- க.கலையரசி (கந்தரோடை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி), குமாரவடிவேல் குருபரன் (யாழ். இந்துக் கல்லூரி), செல்வி மகியினி பாலச்சந்திரன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி).

மத்தியபிரிவு:- க.கலையரசி (அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி), ம.சுபாசினி (பெரியபுலம் மகாவித்தியாலயம்), தெ.ஹர்சன் (யாழ் மத்தியகல்லூரி).

கீழ்ப்பிரிவு:- ப.டிலானி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), யோ.கார்த்திகா (மகாஜனக் கல்லூரி), க.விகர்ணன் (இணுவில் மத்திய கல்லூரி)

**கட்டுரைப் போட்டி**

பா.நர்மதா (மல்லாகம் மகாவித்தியாலயம்), குமாரவடிவேல் குருபரன் (யாழ்.இந்துக் கல்லூரி), மு.ராதிகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

மேற்படி போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்கள் வழங்கப்படும் என்றும்-

இவர்களுக்கான பரிசில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வைத்து வழங்கப்படும் என சைவ பரிபாலனசபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ-5)

### 2001ஆம், 2002ஆம் ஆண்டுகளில்

# 'கலாபூஷணம்' விருதுபெறும் 48 தமிழ்க் கலைஞர்கள்

யாழ்ப்பாணம்,நவ.29

சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் 'கலாபூஷணம்' விருது பெறுபவர்களின பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி 2001 ஆம், 2002 ஆம் ஆண்டுகளில் விருது பெறும் 48 தமிழ்க் கலைஞர்களின் பெயர் விவரங்களை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நேற்றுமுன்தினம் மாலை வெளியிட்டது.

2001 ஆம் ஆண்டில் 27 பேரும், 2002 ஆம் ஆண்டில் 21 பேரும் 'கலாபூஷணம்' விருது பெறவுள்ளனர் என்றும் -

விருதுபெறுவோர் அடுத்த மாதம் 19 ஆம் திகதி ஆனந்தகுமாரசாமி மாவத்தை, கொழும்பு - 7இல் அமைந்துள்ள ஜோன் டி சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் பிற்பகல் ஒரு மணிக்கு வருகையளித்து அங்கு நடைபெறும் விழாவில் தமக்குரிய விருதினைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

இந்துசமய கலாசார அலுவல்கள திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு விருதுபெறுவோர் விவரம் வருமாறு:-

இராசையா வடிவேல் (திருகோணமலை), திருமதி பாலேஸ்வரி நல்லரத்தினசிங்கம் (திருகோணமலை), சித்தர் குமாரவேலு இராசையா (பரந்தன்), திருமதி திரேசா ரூபராணி ஜோசெப் (கண்டி), அப்பாபிள்ளை ஆறுமுகம் (சுழிபுரம்).

திருமதி சந்திரசேகரம் முருகுப்பிள்ளை தங்கம்மா (ஆரையம்பதி), திருமதி சாந்தவதி நாகையா (மட்டக்களப்பு), கிருஷ்ணசாமி ஏரம்பமூர்த்தி (மீசாலை மேற்கு, மீசாலை), தாமவதி குமாரசுந்தரம் (மாவிட்டபுரம்), திருமதி சரஸ்வதி கோபாலசாமி (பண்ணாலை, தெல்லிப்பழை).

செல்லர் பொன்னுத்துரை (அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்), பொன்னுச்சாமி சுப்புசாமி (நல்லூர்), வேலுப்பிள்ளை முத்துக்குமாரு (பூநகரி), பெரியசாமி பிச்சையப்பா (நல்லூர்), ஆறுமுகம் கந்தையா நடராசா (வியாபாரிமூலை, பருத்தித்துறை).

சாந்த வி.சிறீதாஸ் (மட்டக்களப்பு), மரியாம்பிள்ளை பிலோமின் (கொழும்பு - 13), இராமையா சிதம்பரம் (கொழும்பு - 12), நடராசா சுந்தரம்பிள்ளை (நீராவியடி, யாழ்ப்பாணம்), வைரமுத்து வாமதேவன் (கொழும்பு - 03).

நாகர் கந்தையா தங்கரத்தினம் ( சித்தன்கேணி), புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் (நெடுந்தீவு), கதிர்காமு இரத்தினம் (அரியாலை), அனாசி அருளப்பு (அரியாலை), வைரவப்பிள்ளை செல்லையா (சித்திரமேழி, இளவாலை), செல்வத்தம்பி மாணிக்கவாசகர் (கொழும்பு - 15), சதாசிவம் தம்பிஐயா (வாழைச்சேனை).

2002ஆம் ஆண்டில் விருதுபெறுவோர் விவரம் வருமாறு:-

கந்தையா உருத்திரபதி (தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை), சந்திரசேகரம் இராசதுரை (மாதனை, பருத்தித்துறை), கதிரேசு மயில்வாகனம் (வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை), கணபதி இராசரத்தினம் (நவாலி மேற்கு, மானிப்பாய்), கந்தர் சிற்றம்பலம் (அலுக்கை, அளவெட்டி).

நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை (தம்பாட்டி, ஊர்காவற்றுறை), கதிரவேலு தணிகாசலம் (உடுப்பிட்டி), தம்பையா குலசேகரம் (புதுக்குடியிருப்பு), முருகேசு சின்னத்தம்பி (மூத்தையன்கட்டு), சின்னையா கிருஷ்ணபிள்ளை (மட்டக்களப்பு).

இராசையா நாகலிங்கம் (மட்டக்களப்பு), இராசையா குழந்தைவேல் (மட்டக்களப்பு), வேலப்பொடி வல்லிபுரம் (மட்டக்களப்பு), தம்பிமுத்து இராசரத்தினம் (மட்டக்களப்பு), பிரான்ஸிஸ் சுப்பிரமணியம் (திருகோணமலை).

சுவாம்பிள்ளை சந்தியாபிள்ளை (மன்னார்), வேலு பாலகிருஷ்ணன் (இரத்மலானை), ஜோசப் சுந்தரராஜ் (கொழும்பு - 13), என்.ஜி.கிருஷ்ணபிள்ளை (தம்பிலுவில்), செல்லையா மெற்றாஸ்மயில் (நல்லூர்), இராசையா திருஞானசம்பந்தன் (கந்தர்மடம், யாழ்ப்பாணம்). (எ)

# புத்தளம் நகரபிதா ஹுசைன் துவக்குச் சூட்டிலிருந்து தப்பினார்!

## வாகனத்தில் வருகையில் மறைந்திருந்து தாக்குதல்

புத்தளம்,நவ.29

புத்தளம் நகரபிதா ஏ.எம்.எச். ஹுசைன், நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டிலிருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

இச்சம்பவம் புத்தளம் - மன்னார் வீதியில் 2ஆம் மைல் அருகிலுள்ள மணல்தீவு என்னுமிடத்தில் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

4ஆம் மைல் அருகே வெள்ளம் காரணமாக பாதைகள் பழுதடைந்ததைப் பார்த்துவிட்டு அவர் வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம், ஒளிந்திருந்த துப்பாக்கி நபர்கள் இவரது 'கெப்' வாகனத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

எனினும் துப்பாக்கி வேட்டுக்கள் தெய்வாதீனமாக வாகனத்தைத் தாக்காததால் நகரபிதா உயிர்தப்பினார்.

இது குறித்து புத்தளம் பொலீஸில் புகார் செய்யப்பட்டதை அடுத்து துப்பாக்கி நபர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் பொலீஸார் ஈடுபட்டிருக்கின்றனர். (ஜ)

# தன்னை அணுகியோருக்கே அருள் தருபவன் இறைவன்

கண்ணுக்குப் புலனாவது காட்சி. அது பார்வை எனப்படும். அக்காட்சி அகக்காட்சி, புறக்காட்சி என இருவகைப்படும். அகக்காட்சி மனம் சம்பந்தமானது. புறக்காட்சி கண்பார்வையுடன் நேரடியாகவே தொடர்புடையது. கண்ணும் மனமும் பொருந்திக் காணும் காட்சியே உலகின் வியப்புமிகு காட்சிக்கு அழைத்துச் செல்லும். ஐம்புலனடக்கம் - மன ஒடுக்கம் என வியக்கச்செய்யும் அச்சிவியப்பு பரம்பொருள் என்னும் பேருண்மையைக் காட்டும்.

நாம் எமது அன்றாட வாழ்வில் பல பொருள்களைக் காண்கின்றோம்.

**ஞானக்கதிர்**

சில பொருள்களைப் பார்த்ததும் சிந்தனை வயப்படுகின்றோம். சிலவற்றைக் கண்டும் சிரத்தை செய்யாது விட்டுச்செல்கின்றோம்.

ஒரு பொருளைப் பலர் பார்க்கும்போது பல விதங்களிலே பல கோணங்களிலே சிந்தனை செய்கின்றனர். ஒரே பொருள் அவரவர் சிந்தனைக்கேற்ப வெவ்வேறு வகையாகக் காட்சியளிக்கும்.

ஒவ்வொருவரும் என்ன மனநிலையில் ஒரு பொருளை நோக்குகின்றாரோ அவ்வாறே அவருக்கு அது காட்சியளிக்கின்றது.

அப்பர் சுவாமிகள் திருவையாற்றில் மூழ்கி எழுந்து வருகின்றார். அவர் கண்ட காட்சி:

*"மாதர்ப்பிறைக் கண்ணி யானை..."*

ஆணும் பெண்ணுமாக இரு யானைகள் வருகின்றன. அந்தக் களிறும் பிடியும் சிவமும் சக்தியுமாகக் காட்சியளிக்கின்றன. இவ்வாறு அப்பர் திருவையாறுக் கோயிலை நோக்கிச் செல்லும்போது, காணும் காட்சிகள் யாவும் அவருக்குச் சிவமும் சக்தியுமாகவே காட்சியளிக்கின்றன. அவர் பார்வையில் பரம்பொருளைத் தவிர வேறெதுவுமே தோன்றவில்லை. ஓடும் செம்பொன்னும ஒதுக்கவே ஒக்கவே நோக்கும் திருவுள்ளம் கொண்டவரன்றோ அவர்.

அதனையே திருமூலரும் -

*"மரத்தை மறைத்தது மாமத யானை*
*மரத்துள் மறைந்தது மாமத யானை*
*பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்*
*பரத்துள் மறைந்தது பார்முதல் பூதம்"*

- என்றார்.

மரத்தினால் செய்யப்பட்ட யானை ஒன்றைச் சாதாரண மனிதன் ஒருவன் காண்கின்றான். அப்பப்பா எத்தகைய அழகு என்று யானையின் அழகில் அதன் அமைப்பில் வியக்கின்றான். அதிசயிக்கின்றான். இங்கே யானை தோன்றியது மரம் மறைந்தது.

அதே யானையை ஒரு சிற்பாச்சாரியார் காண்கிறார். அவர் யானையின் எழிலைக் அதிசயிக்கவில்லை. அந்த யானை எவ்வாறு செய்யப்பட்டது; எந்த மரத்தினால் செய்யப்பட்டது என்றே சிந்திக்கின்றான். இங்கே மரத்தில் மறைந்தது மாமத யானை.

அதேபோல நாம் எமக்கு வழிகாட்டி நின்று எம்மை வழிநடத்திச் செல்கின்ற மேலான சக்தியைச் சிந்தித்து நோக்குவோமாயின் எம்மை உலகியல் வாழ்வில் அழுந்தச் செய்யும் மாயைத் தோற்றங்களை நீக்கி மேலான பரம்பொருளைக் காணலாம்.

இவற்றையே எம் ஆலய வழிபாடுகள் விளக்குகின்றன. ஆலயங்களுள்

**க.மணிமாறன்**

நாம் சென்று எமக்கு மேலான சக்தியைச் சிவனாக உமையாக கந்தனாக கணபதியாக எண்ணி வழிபடும்பொழுது அப்பரம்பொருள் எமக்குக் காட்சியளிக்கின்றது. ஆனால், இதே சிலையைக் கல்லாகவும் மரமாகவும் நோக்குபவன் கண்களில் பரம்பொருள் காட்சியளிக்குமா?

*"நலமிலன் நண்ணினார்க்கு நலன்*
*சலமிலன் பேர் சங்கரன்"*

இறைவன் தன்னை அணுகியவர்களுக்கே முத்தி இன்பத்தைக் கொடுப்பான். ஆகவே நாம் நாள்தோறும் எமக்கு மேலாக நிற்கும் பரம்பொருளைச் சிந்தித்து நோக்கி வணங்குவோமாக. ☆

# அரச ஊழியருக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.மாவட்டத்தில் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களில் 35 பேருக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் அடுத்த மாதம் 6ஆம் திகதி யாழ்.செயலகத்தில் வைத்து வழங்கப்படவிருக்கின்றது.

அன்று செயலகத்தில் இடம்பெறவுள்ள ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தை அடுத்து புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சின் செயலாளர் ஜெயரத்தினம், மேலதிக செயலர் குமாரதாஸன் ஆகியோர் இக்கொடுப்பனவுக்கான காசோலைகளை வழங்கவிருக்கின்றனர்.(ஓ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இரும்புக்கதவு விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள கடைப் பாவனைக்குரிய இரும்பு உருக்குக் கதவு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ்.தயாபரன், மே/பா, பழனியப்பன் 543, ஆடியபாதம் வீதி, நல்லூர் வடக்கு.

(சி-25116)

### விற்பனைக்கு

வளர்ப்பு மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், **Air Pump** என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(10639)

மிகத்தரம் வாய்ந்த கோழி எரு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பா.மயூரன், இல.154, மருத்துவபீடம் முன்பாக, அல்லது நவசுதன் பழைய தபாலகம் அருகில், அளவெட்டி.

(11140)

**Prima Broiler** பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11108)

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சந்தை விலையில் இருந்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். (சுத்தம் செய்தல் இலவசம்) Y.A.சுரேஸ் (கிராமக் கோட்டுச் சந்தியில் இருந்து 150m உள்) பருத்தித்துறை. (11038)

### இலக்கிய விமர்சனம்

1.நாகம்மாள் நாவல் 2.கோடை நாடகம் ஆகியவற்றின் விளக்கமும் விமர்சனமும் 3.தமிழ்மொழியில் இலக்கிய விமர்சனம். எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. விலை ரூபா 40/-.

(11105)

### தவறிவிட்டது

புதுக்குளம், கனகராயன்குளம் என்னும் முகவரியைச் சேர்ந்த துரைராஜ் யோகராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (782404083X) 26-11-2002 அன்று யாழ்ப்பாணத்துக்கும் சித்தன்கேணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.மணிக்குரல் சேவையில் அல்லது த.தங்கராசா, பழைய தபாற்கந்தோர் சித்தங்கேணி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(11132)

### திருமண சேவை

1968, ரேவதி, செவ்வாயற்ற, கிரகபாவம் குறைந்த **B.Sc.** ஆஸ்திரேலிய மணப் பெண்ணுக்கு பொருத்தமான மணமகன் வெளிநாட்டில், உள்நாட்டில் தேவை. சீதனமுண்டு. மணமக்கள் தேவைகட்கு நாடுங்கள். துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(11133)

## படையினரின் முகாமில் தங்கி வாழும் நாய்களால் பொதுமக்களுக்கு சிரமம்

தென்மராட்சி,நவ.29

மிருசுவில் உசன் பகுதிகளில் உள்ள படையினரின் முகாம்களில் தங்கி வாழும் நாய்கள் அப்பகுதியில் பெரும் அட்டகாசம் புரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக முகாமை அண்டியுள்ள வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகளை இந்த நாய்கள் பிடித்துக் கொண்டு முகாமுக்குள் சென்றுவிடுவதாகவும்-

முகாமை அண்டிய வீதியில் செல்லும் பொதுமக்களை இந்த நாய்கள் கடித்து விடுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## பளைப்பகுதியில் தொற்று நோய் விழிப்புணர்வு

பளைப் பிரதேசத்தில் பருவமழையைத் தொடர்ந்து தொற்று நோய்கள் பரவக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும்-

எனவே, மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் சுகாதார நடைமுறைகளைப் பேணவேண்டும் என்றும்-

பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர்.இராசதுரை துண்டுப்பிரசுரம் மூலம் அறிவித்துள்ளார்.

பளைப் பிரதேசத்தில் நுளம்பு மற்றும் ஈலையான் ஆகியவற்றின் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களும் சுகாதாரப் பகுதியினருடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் துண்டுப் பிரசுரத்தில் கோரியுள்ளார். (எ-117)

## பரிசளிப்பும் நிறுவுநர் தினமும்

வடமராட்சி,நவ.29

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய நிறுவுநர் தின விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அதிபர் கே.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் வடமராட்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி தியாகராசா பரிசில்களை வழங்குவார்.

நிறுவுநர் கணபதிப்பிள்ளை மரகதவல்லி நினைவுரையை சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள் நிகழ்த்துவார். (எ-173)

## மண்டைதீவில் சிரமதானம்

மண்டைதீவு,நவ.29

மண்டைதீவு மகா வித்தியாலய வளாகத்தை இன்று வெள்ளிக்கிழமை சிரமதானம்மூலம் சீர்செய்ய பாடசாலை- அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்துள்ளது.

இச்சிரமதானப் பணியில் பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும நலன் விரும்பிகளை பங்கேற்குமாறு அபிவிருத்திச் சபை கேட்டுள்ளது. (ஏ-88)

## மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.விஜயம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொட்பிறி குணதிலக தலைமையிலான குழுவினர் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளனர்.

நாளை காலை வருகை தரவுள்ள இக்குழுவினர் செயலக அதிகாரிகள், படைத்தரப்பு அதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள், விடுதலைப் புலிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

இக்குழுவில் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான என்.செல்வக்குமாரன், சரத்கூரே, மனோகரி முத்தெட்டுவேகம ஆகியோரும் இடம் பெறுவர். (ஏ-10-5)

## கோழி வளர்ப்பு தொடர்பான கருத்தரங்கு

வடமாட்சி,நவ.29

கரவெட்டி கால்நடை வளப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் கோழி வளர்ப்பு தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு நாவலர் மடத்திலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கில் கால்நடை வைத்தியர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள்.

இப்பகுதியிலுள்ள கோழிப் பண்ணையாளர்கள், கோழி வளர்ப்போர், கோழி வளர்ப்பதில் ஆர்வம் உள்ளோர் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-173)

## ஸ்ரீ விநாயக புராண வசன காவிய நூல் வெளியீட்டு விழா

**திரு.க.தேவராசா**

(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

*தலைமையில் நடைபெறும்.*

இடம்: **ஸ்ரீ பரராசசேகர பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபம்.**

காலம்: 01-12-2002 ஞாயிறு பிற்பகல் 3.00 மணி

விளம்பர அன்பளிப்பு:

**அற்புதா ரேடிங் கொம்பனி**

**198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**(பஸ்நிலையம் முன்பாக)**

(சி-25126)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் முத்தையா செல்லத்தம்பி ஜே.பி.**

*(நல்லூர், யாழ்ப்பாணம்)*

சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் ஆயுட்கால உறுப்பினரும், முன்னாள் உபதலைவரும், தற்போதைய நிர்வாக சபை உறுப்பினருமான **மு.செல்லத்தம்பி** அவர்களின் மரணச்செய்தி கேட்டு கண்ணீர் சொரிகிறோம்.

அன்னார் ஆரம்பகாலம்முதல் இன்றுவரை சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்திற்கும் அதுசார்ந்த சமூகத்திற்கும் ஆற்றிய சேவை மிகவும் கனதியானது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மிசன் பாடசாலை வீதி, கோண்டாவில்.*

சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசமும், புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியமும்.

(11146)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**பாலன் அருணகிரிநாதன்**

தோற்றம்: 15.11.1940

மறைவு : 30.10.2002

இன்று **(29.11.2002)** வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"தில்லைபம்பதி" கோண்டாவில்* (11143)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## பிற்போடப்பட்டுள்ளது

கொய்யாத்தோட்ட கிறீஸ்து அரசர் ஆலய இளைஞர் மன்றத் தினரால் 24.11.2002 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு த[illegible] முடியாத காரணத்தினால் 25.12.2002 இற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

(11144) **இளைஞர் மன்றம்.**


**NIPPON® 9PCS.**

ஒட்டாத சமையற் பாத்திரத் தொகுதி



**அவதானம்:** பாத்திரத்தின் ஒட்டாத உட்புறத்தை சுத்தம் செய்வதற்கு ஒட்டாத சுத்திகரிப்பானை பயன்படுத்தவும்.

லங்கா நிப்போன்

இல. 18, கெய்சர் வீதி, கொழும்பு - 11
தொலைபேசி : 437735, 324726
தொலைநகல் : 437736

**காட்சியறை:**
இல. 10, ட்றிலோனி பிளேஸ்,
(பால்சாலையின் பின்புறம்)
பம்பலப்பிட்டி சந்தி, கொழும்பு – 4.
தொலைபேசி – 589992, 582365.


## கலை நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வித்தியாலயத்தில் இன்று (29.11.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவிருந்த கலைநிகழ்ச்சி தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(11150) - அதிபர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.இளையதம்பி உதயகுமார்**

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - கரவெட்டி)

இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட தேசியமட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் தட்டெறிதல் நிகழ்ச்சியில் 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும், வடக்கு-தெற்கு சமாதான விளையாட்டுப் போட்டியில் தட்டெறிதல் நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் பெற்றமைக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அவர் மேன்மேலும் பல் துறைகளிலும் பல பதக்கங்களைப்பெற இறைவனைப் பிரார்த்திப்பதோடு எம் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

*பிரதேச செயலகம், கரவெட்டி.* (11145)

**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.**

## மரண அறிவித்தல்

**இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை**

*நயினாதீவு*

*(முன்னாள் கணக்காளர் S.V.M. களஞ்சியம், நெல்லியடி)*

நயினாதீவு, 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை நேற்று (28.11.2002) வியாழக்கிழமை நயினாதீவில் காலமாகிவிட்டார்.

அன்னார் இராமலிங்கம் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சரவணமுத்து - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கண்மணியின் அன்புக் கணவரும் பெரியநாயகி (இந்தியா), சந்திரசேகரம் (நில அளவையாளர்), சந்திரராணி (கொழும்பு), சாரதாமணி (ஆசிரியை), மரகதமணி (கொழும்பு), யோகராணி (B.Sc., சுவிஸ்), அன்னபூரணி (சுவிஸ்), வசந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகராசா (இந்தியா), வசந்திராதேவி (கொழும்பு), பழனிநாதன் (கணக்காளர்), சகாதேவன் (விரிவுரையாளர், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), சிவானந்தராசா (கொழும்பு), கனகநாயகம் (சுவிஸ்), கணேசலிங்கம் (சுவிஸ்), சசிகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் நயினாதீவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் வட்டாரம், நயினாதீவு.* (11142)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

# சமாதானச் சூழ்நிலையைப் பயன்படுத்தி வர்த்தக நிறுவனங்களை விஸ்தரிப்போம்

## கலோனியல் கூட்டு நிறுவன அதிபர் பவன் நடராஜா அழைப்பு




*ரி.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 26ஆம் திகதி தோன்றித் தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் கலோனியல் கூட்டு நிறுவனங்களின் அதிபரான பவன் நடராஜா.*

*நுவரெலியா உடபுஸ்ஸல்லாவையில் பிறந்து வளர்ந்தவர் பவன் நடராஜா. நுவரெலியா புனித திருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்றவர். மருந்தகத் துறையில் தனது வர்த்தகத்தை ஆரம்பித்தவர். இன்று இரும்பு உற்பத்தி விற்பனைத் தொழிலில் உயர்ந்துள்ளார். கலோனியல் கூட்டு நிறுவனங்களுக்கு அதிபதியாக இருக்கிறார். அவரிடம் 90 ஊழியர்கள் வேலை செய்கின்றனர்.*

*வடக்கு - கிழக்கில் இன்று சமாதானம் மலர்ந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி தென்பகுதிவர்த்தகர்கள் தமது நிறுவனங்களை விஸ்தரிக்கவேண்டும். அதேவேளை, நாம் எல்லா இனத்தினருடனும் ஒற்றுமையாக வர்த்தகத்தில் ஈடுபடுகின்றோம். இந்த நாட்டில் எப்படி பிரிவினை எண்ணம் ஏற்பட்டது என்பதே தெரியவில்லை என்கிறார் பவன நடராஜா.*

*ரி.என்.எல். தொலைக் காட்சியில் பவன் நடராஜாவை அறிவிப்பாளர் சமுதிக சமர விக்கிரமவும் 118 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.*

**வர்த்தக ஸ்பெஷல்**

*கேள்வி:* வர்த்தகத்துறையில் உயர்ந்திருக்கும் நீங்கள் கடந்து வந்த பாதையைப் பற்றி சுருக்கமாகக் கூறமுடியுமா?

*பதில்:* நான் உடபுஸ்ஸல்லாவையில் பிறந்தேன். அங்குள்ள 'எடிக்ட்' தோட்டத்தில் என் பெற்றோர் வேலை செய்தனர். நான் நுவரெலியா புனித திருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்றேன்.

உடபுஸ்ஸலாவையிலிருந்து நுவரெலியா 20 மைல் தூரம். நாம் ஐந்து சகோதரர்கள். பயண டிக்கெட்டுக்கு எமக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.7.50 சதம் செலவாகும். மேலதிகமாக 10 சதம் மட்டும்தான் எமது தந்தை எமக்குத் தருவார். சில நாள்களில் ராகலை வரை 7 மைல் தூரம் நாம் நடந்து செல்வோம்.

இந்த இடையூறுகளுக்கு மத்தியிலும் பாடசாலையில் நன்கு கல்வி கற்று மிளிரக்கூடியவனாக நான் இருந்தேன்.

கல்வியை முடித்துக்கொண்ட நான், மருந்தகம் ஒன்றை நடத்தவேண்டும் என்று விரும்பினேன். அதன்படி என் அண்ணனின் வழிகாட்டலில் நெத்தி குமார என்பவரின் மருந்தகத்தில் மருந்து வர்த்தகம் பற்றித் தெரிந்துகொள்ள ஆரம்பித்தேன்.

1973இல் பழைய சோனகத் தெருவில் வர்த்தகராக இருந்த ராமசாமி என்பவருடன் வர்த்தகத்தில் இணைந்தேன். அவர் மிகவும் திறமையானவர். ஒரு வருட காலமாக அவரிடம் பணியாற்றி பின்பு என் சகோதரருடன் சேர்ந்து வர்த்தகத்தில் ஈடுபட்டேன். ஆனால், சகோதரர் சிலகாலத்தில் இறந்துவிட்டார்.

அதன் பின்பு வர்த்தகத்தை நான் பொறுப்பேற்றேன்.

*கேள்வி:* 25 ஆண்டுகளுக்கு மேலாக வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளீர்கள். எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளீர்கள்? குறிப்பாக இன ரீதியாக ஏதாவது பிரச்சினைகள் இருந்துள்ளனவா?

*பதில்:* வர்த்தகர் என்ற ரீதியில் அனுபவிக்க நேரும் பிரச்சினைகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். நாம் வர்த்தகத்தை ஆரம்பித்தபோது இறக்குமதிகள் இல்லை. எந்த ஒரு பொருளையும் கூட்டுறவு நிலையத்தில்தான வாங்கவேண்டும். பொருள்களை வாங்குவதில் பல சிக்கல்கள் இருந்தன.

*கேள்வி:* முன்னர் மூடிய பொருளாதாரம் இருந்தது. இறக்குமதிகள் இருக்கவில்லை. தற்போது அப்படி அல்ல. இரும்புத் தொழிலைப் பொறுத்தவரையில் நீங்கள் எதனை விரும்புகிறீர்கள்?

*பதில்:* தற்போதைய நடைமுறையையே விரும்புகிறேன். அது எல்லோருக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது.

*கேள்வி:* இறக்குமதிகள், உள்ளூர் உற்பத்திகளை பாதிப்பதாக பொதுவான குற்றச்சாட்டு இருக்கிறதே?

*பதில்:* ஆம், அதில் உண்மை இருக்கிறது. ஆனால், இலங்கையில் ஒரு சில பொருள்கள்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதிகமான கேள்விக்குரிய நிரம்பல் இல்லை. அதனால் அவற்றை இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. ஆனால், எம்மால் அப் பொருள்களை நாம் உற்பத்தி செய்யக்கூடியதாக இருப்பின் வேலை வாய்ப்புகள் ஏற்படும். இதற்கான ஒத்துழைப்பு அரசால் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

*கேள்வி:* உங்களது ஆலோசனை என்ன?

*பதில்:* எமது நாட்டில் உற்பத்திச செலவு அதிகம்; வரிச்சலுகைகள் இல்லை. இது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாகவுள்ளது.

*கேள்வி:* அப்படியாயின் விலையில் சமத்துவம் எதிர்பார்க்கிறீர்களா?

*பதில்:* ஆம், அது கட்டாயமானது.

*கேள்வி:* நீங்கள் ஓர் இறக்குமதியாளராக இருந்தும் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதில் ஆர்வமாக இருக்கிறீர்களே?

*பதில்:* என்னிடம் 90பேர் வேலை செய்கின்றனர். எம்மால் இரும்புப் பொருள்களை உற்பத்தி செய்யமுடிந்தால் மேலும் பலருக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தலாம். ஏனைய நாடுகளின் தரத்திற்கு வரலாம்.

*கேள்வி:* இன்று சமாதானம் மலர்ந்துள்ளது. தெற்கிலிருந்து பல வர்த்தகர்கள் வடக்கில் தமது நிறுவனங்களை ஆரம்பித்துள்ளனர். இந்த வாய்ப்புகள் பற்றி என்னகூற விரும்புகிறீர்கள்?

*பதில்:* ஆம், நாம் எல்லோரும் எதிர்பார்த்த சமாதானம் மலர்ந்துள்ளது. அதனை ஆண்டவர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். சரியான நேரம் வந்துவிட்டது. வடக்கு - கிழக்கில் எமது வர்த்தகமும் விஸ்தரிக்கப்படவேண்டும். என் தொழிலைப் பொறுத்தவரையில் எந்த இனபேதமும் இல்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் வேறுபாடின்றி இருக்கிறோம். இந்தப் பிரிவினை எல்லாம் எங்கிருந்து வந்தன என்று தெரியவில்லை.

எமது வாடிக்கையாளர்கள் எல்லோரும் சிங்களவர்கள். எந்தப் பிரச்சினையுமின்றி நாம் பரஸ்பரம் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றோம்.

*கேள்வி:* நீங்கள் முடிவுரையாக எதனைக் கூறவிரும்புகிறீர்கள்.

*பதில்:* விற்பனையாளர்களாக கடைகளில் இருப்பவர்கள் மிகக் குறைந்த கல்வித் தகைமைகளுடனே வருகின்றனர். அவர்கள் அத்துடனேயே இருந்து விடுகிறார்கள். இவர்களுக்கு ஏதாவது ஒருவகையில் சந்தைப்படுத்தல் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். இந்தியா போன்ற நாடுகளில் தொழில்நுட்பக் கல்வி வழங்கப்படுகிறது. இங்கிருக்கும் இளைஞர்கள் கடையில் வேலை செய்தாலும் மாலைவேளைகளில் நேரத்தை வீணாக்குகிறார்கள்.

இவர்களுக்காக பயிற்சிக் கலாசாலை ஒன்றை நீங்கள் ஆரம்பித்தால் அதனால் பெரும் பயனை அடைவார்கள் - இவ்வாறு பவன் நடராஜா தெரிவித்தார்.

---

### இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில்

## புலிகளின் நீதி நிர்வாகம் குறித்து விசாரிக்க பிரதமர் உத்தரவாம்

கொழும்பு,நவ.29

கிழக்கு மாகாணத்தில் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப புலிகளின் நீதி, நிர்வாகத்துறைச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றதா என உடன் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொலீஸ்மா அதிபர் ரி. ஆனந்தராஜாவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தென்னிலங்கைப் பத்திரிகைகள் சிலவற்றில் வெளியான செய்திகளை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் நடப்பதாக செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

அவ்வாறு அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெற்றால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

(ஒ-12)

## மிருசுவில் படுகொலைவழக்கு: 5 இராணுவத்தினருக்கு பிணை

கொழும்பு,நவ.29

மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைகக்கப்பட்டிருந்த 5 இராணுவத்தினரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது குற்றப்பத்திரங்களைத் தாக்கல் செய்த மேல் நீதிமன்றக் குழு 8 லட்சம் ரூபா ரொக்கப பிணையிலும், 6 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் இவர்களை விடுதலை செய்தது.

சந்தேக நபர்கள் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சாட்சியங்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது எனவும், ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் புலனாய்வுப் பிரிவினர் முன்னிலையில ஆஜராகவேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

மிருசுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள தமது இருப்பிடங்களைப் பார்வையிடச் சென்ற 8 பேரை படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ஒ-ரி)

---

## மாவீரரை வணங்க வேண்டியது ஒவ்வொரு தமிழரதும் கடமை!

### தென்மராட்சி வணிகர் ஒன்றியத் தலைவர் உரை

மாவீரர்களை வணங்க வேண்டியது ஒவ்வொரு தமிழரதும் கடமையாகும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் தென்மராட்சிப் பிரதேச வணிகர் கழகங்களின் ஒன்றியத் தலைவர் ந.சற்குணராஜா.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகர மாவீரர் நினைவுப் பந்தலில் இடம்பெற்ற மாவீரர்தின நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனை வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:- 'எமது தேசத்தின் விடுதலைக்காக தாயக இலட்சியத்துடன் போராடி தம்முயிரை நீத்த மாவீரர்களை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விசுவாசத்துடன் கௌரவிக்கவேண்டும். நாங்கள் நிம்மதியாக உறங்க வேண்டுமென்பதற்காக பல இரவுகள் கண்விழித்து எம்மைக் காத்த உத்தமர்கள் இந்த மாவீரர்கள். இந்த மாவீரர்களை நாள்தோறும் வணங்கவேண்டியது ஒவ்வொரு தமிழரதும் கடமையாகும்.

மாவீரர்கள் அனைவரும் எமது தேசத்துப் பிள்ளைகள் என்பதை யாரும் மறக்கக்கூடாது. பிற நாட்டுப் படைகள் எமது மண்ணை ஆக்கிரமித்தபோது அவற்றை விரட்டியடித்த பெருமை எமது மண்ணின் மைந்தர்களான மாவீரர்களைச் சாரும். ஒவ்வொரு மாவீரனும் எமது மண்ணையும் மக்களையும் நேசித்ததாலேயே தம்முயிரை நீத்தார்கள். உயிர் பிரியும் வேளையிலும் தமது இலட்சிய வேட்கையை மற்றொரு போராளியிடம் ஒப்படைத்துவிட்டே சென்றுள்ளார்கள் அவர்கள்.

ஒவ்வொரு மாவீரரின் இலட்சிய வேட்கைப் போராட்டத்தின் முழுவடிவமே இன்று சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட உண்மைகளை அறியவைத்தது.

எமது போராட்டத்தின் நிலைமைகளை சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டதாலேயே இன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஒஸ்லோ வரை அழைக்கப்பட்டுள்ளனர். சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதற்கு மாவீரர்களின் பங்களிப்பே முக்கிய காரணமாகிறது. மாவீரர்களின் நினைவுகள் ஒவ்வொரு வீட்டிலும் நினைவு கூரப்படவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு மலர் வணக்கம் செலுத்தினர்.

(ஒ-117)

## கத்தோலிக்க கலை, இலக்கிய விழா

கொழும்புத்துறை,நவ.29

தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத்தினால் நடத்தப்படும் 2002ஆம் ஆண்டுக்கான தேசிய கத்தோலிக்க கலை, இலக்கிய சாகித்திய விழா எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி கொழும்பு பேராயர் இல்ல ஜூமிலி மண்டபத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் கத்தோலிக்க எழுத்தாளர்களிடையே மும்மொழிகளிலும் நடத்தப்பட்ட கட்டுரை, சிறுகதை, கவிதைப் போட்டிகளுக்கான விருதுகள் இவ்விழாவில் வழங்கப்படவுள்ளன.

தமிழ்க் கவிதைப் போட்டியில் கொழும்புத்துறையைச் சேர்ந்த எஸ். யேசுதாஸ் முதலாம் இடத்தையும் அதே இடத்தைச் சேர்ந்த ஜோ.ஜெஸ்ரின் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-30)

## இலங்கைக்கு எதிரான

# சில நாடுகளின் சதி முயற்சியை ஒஸ்லோ மாநாடு காட்டுகிறது

## குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு,நவ.29

இலங்கைக்கு எதிரான சதி முயற்சியில் சில நாடுகள் ஈடுபட்டு வருவதனையே ஒஸ்லோ மாநாடு எடுத்துக் காட்டுவதாக ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் என்ற போர்வையில் புலிகளின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும், சர்வதேச ரீதியில் அவர்களுக்குச் செல்வாக்கை வளர்க்கவும் தற்போதைய அரசு வழி அமைத்துக் கொடுத்துள்ளது.

அதேநேரம், விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்துக்கு அங்கீகாரத்தினையும், தமிழீழத்துக்கு நிதியையும் வழங்கியுள்ளது. இந்த மாநாட்டில் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி வலியுறுத்தப்பட்டிருப்பதால் மாநாட்டில் பங்கு பற்றிய நாடுகளும் புலிகளையே ஆதரித்துள்ளமை தெரியவந்துள்ளது. இவ்வாறு ஜே.வி.பி மேலும் தெரிவித்துள்ளது.

(ஒ-12)

**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை**

**மனைப்பொருளியல் டிப்ளோமா,**

**அடிப்படைப் பயிற்சிக்கான**

**விண்ணப்பம் கோரல்**

அ) மனைப்பொருளியல் அடிப்படைப் பயிற்சி

தையல், மனையியல், பூவேலை, தலையலங்காரம், ஐசிங், சிற்றுண்டி தயாரித்தல், முதலுதவி, கூட்டுறவு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய 6 மாதகால பயிற்சி.

**பதிவுக் கட்டணம் 150/= மட்டும், பயிற்சி இலவசம்.**

ஆ) மனைப்பொருளியல் டிப்ளோமாப் பயிற்சி

கூட்டுறவுச் சங்கங்களில் நடத்தப்பட்ட அடிப்படைப் பயிற்சியில் பயிற்சி பெற்றவர்களும் ஏனைய நிறுவனங்களில் அடிப்படைப் பயிற்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தொழிலக தையல், பெயின்ரிங், ஐசிங், முகஒப்பனை, மேலதிக மனையியல் நுட்பங்கள் உள்ளடக்கப்பட்ட 6 மாதகால பயிற்சி.

**பதிவுக்கட்டணம் 250/= பயிற்சி இலவசம்.**

**பயிற்சி பெறவிரும்புவோர் 10.12.2002இற்குமுன் விண்ணப்பிக்கவும்.**

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி -

மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,
வீரசிங்கம் கட்டடத் தொகுதியின் 2ஆம்மாடி,
இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

மாவட்டச்செயலாளர்

(C-25131)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/குடமியன் அ.த.க. பாடசாலையின் அதிபர்

**திரு.பொன்னம்பலவாணர் கனகரத்தினம்**



*B.A., SLPS - 2-II*

அவர்கள்

கல்வி முதுமாணி(M.Ed.) பட்டம் பெற்றமையைப் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/குடமியன் அ.த.க. பாடசாலை ஆசிரியர்கள்

*குடமியன்* (11152)

### TENDER FOR SUPPLY AND INSTALLATION OF WASHING MACHINE

Tenders are hereby called from suitable suppliers for supply and installation of Industrial Washing Machine with driving facilities at a capacity of 50 Kilos. The Tenders will be accepted till 10/12/2002 upto 10.00 a.m. at the details of the washing machines are given below:

Capacity - 50 Kilos

Size - 1 metre diameter and 2 metres length

Suitable for washing Bed sheets, Checked cloths, Towels and Pillow covers.

The Tender should be either posted or put it to the Tender Boards on or before 10/12/2002 at 10.00 a.m.

General Hospital,
Jaffna.
27/11/2002. (C-25127)

Dr.S.Sathurmugam,
*Director,*
*G.H.Jaffna.*

## பிரிவுத்துயர் பகிர்வு

எமது பாடசாலை ஆசிரியை செல்வி ஜெயகௌரி மாசிலாமணி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மாசிலாமணி செல்வரத்தினம்**

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
ஆசிரியர் நலனோம்பு மன்றம்

*யா/உடுப்பிட்டி*
*சைவத்தமிழ் வித்தியாலயம்* (11155)

## ஜி.சீ.ஈ.(சா.த) ஒரு தொகுதி வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

குருநகர்,நவ.29

எதிர்வரும் திங்களன்று ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்கான ஒருதொகுதி வினாத்தாள்கள் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து தரை மார்க்கமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்கள லொறிமூலம் வினாத்தாள்கள் எடுத்துவரப்பட்டு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இயங்கி வரும் பரீட்சை இணைப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

(எ-51)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

தென்மராட்சி,நவ.29

தென்மராட்சி பிரதேச விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும்.

(எ-117)

## ஆன்மீக தொடர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.29

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளி தோறும் நடத்தப்பட்டுவரும் ஆன்மீகத்தொடர் சொற்பொழிவில் இன்று பிற்பகல் 5.30மணிக்கு 'நாவலருடைய தமிழ்ப்பணி' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் ச.பாலசண்முகனும், 'நாவலருடைய சமுதாயப்பணி' என்ற தலைப்பில் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசனும், 'நாவலருடைய சமயப் பணி' என்ற தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசனும், 'நாவலருடைய பாரம்பரியம்' என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவன் சைவப்புலவர் ஏ. அனுசாந்தனும் உரை நிகழ்த்துவர்.

இந்து சமய விவகார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் இந்நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். (எ-5)


**கணக்கீடு**

*A/L 2004*

கணக்கீட்டு சமன்பாடு

ஆரம்பம் : நாளை 5.00 p.m

*A/L 2003*

S.L.A.S.

ஆரம்பம் : செவ்வாய் 5.00 p.m

ஆசிரியர் : S.தவா B.Com. (Hons) (Acc.Spl)

SHAMROCK

Temple Road, Jaffna. (11161)

**கணக்கீடு**

*A/L 2004*

வங்கிக் கணக்கிணக்கக்கூற்று

ஆரம்பம் நாளை 7.30 a.m.

ஆசிரியர் : S.தவா
B.Com. (Hons) (Acc.Spl)

விடுமுறை கால நேரஅட்டவணையை அலுவலகத்தில் பெறலாம்.

NIRU TUITION CENTRE

KONDAVIL (11160)

யாழ்.மண்ணில்
ஒரு நம்பிக்கை நட்சத்திரம்

IBS கல்வி நிறுவனம்

காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

தனது புதிய கிளையை
டிசெம்பர் 5 முதல்
நல்லூரிலும்
தரம் 5 முதல் O/L வரை
அனுமதிகள் இன்று தொடக்கம் (11162)

IBS முத்திரைச் சந்தி,
நல்லூர்.

**விஷ்ணு கல்வி நிலையம்**

தாவடி, கே.கே.எஸ். வீதி

தரம் 1 முதல் A/L
வரையான சகல
புதிய வகுப்புக்களும்
ஆரம்பம் 01.12.02
ஞாயிறு 9 a.m

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(11159) - நிர்வாகி.


**யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்**

**கரவெட்டி**

**பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் நினைவு தினமும் - 2002**

*அமரர் பொன். கணபதிப்பிள்ளை மரகதவல்லி தம்பதியர் நினைவாக*

| | | |
|---|---|---|
| காலம் | :- | 2002.11.30 ஆம் திகதி சனிக்கிழமை. 14.30 மணி |
| பிரதம விருந்தினர் | :- | திரு.சி.தியாகராசா *(உதவிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம்.)* |
| நினைவுப் பேருரை | :- | ஸ்ரீலஸ்ரீ கை.நமசிவாயக் குருக்கள் |
| பரிசில் வழங்குபவர் | :- | திருமதி சிவனேஸ்வரி தியாகராசா |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.

(C/25128)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
07 - 05 - 1948



மறைவு
30 - 10 - 2002

### திருமதி நாகேந்திரம் சிவயோகநாயகி

*"குடும்பத்தின் சுமைதாங்கியாய் கடமையுள்ள தாயாய், தாரமாய்*
*எண்ணாறு வயதின்மேல் எளிமையாய் வாழ்ந்து வந்தாய்*
*பொல்லாத வேளையிலே வந்தான் காலனவன் நோய் வடிவில்*
*கனிவான உன்வதனம் கண்டு, திங்களொன்று ஆனதம்மா*
*ஓராயிரம் திங்கள் கழிந்தாலும் மறக்குமோ உன் நினைவு?"*

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்தோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் தோளோடு தோள் நின்று உதவி புரிந்தோருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (29.11.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*மே/பா. வே.நல்லதம்பி (TRRO)*
*'புனிதம்'*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

(11148)

## துயர் பகிர்வு

எமது பாடசாலை பழைய மாணவர்களின் தந்தையும், மாமனாருமாகிய

### செல்லையா திருநாவுக்கரசு

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர் அனைவரது துயரிலும் நாமும் பங்குகொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
ஆசிரியர் நலனோம்பு மன்றம்.

*யா/உரும்பிராய் சைவத்தமிழ்*
*வித்தியாலயம்* (11154)

## மரண அறிவித்தல்

### பொன்னையா அரியரத்தினம்

**(இளைப்பாறிய நீர்ப்பாசன ஓவசியர்)**

அல்வாய் கிழக்கு, அல்வாயை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா அரியரத்தினம் அவர்கள் நேற்று (28.11.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி செல்லம்மா அரியரத்தினம் அவர்களது கணவரும்,காலஞ்சென்ற ஈஸ்வரதாசன் (ஆசிரியர்) மற்றும் ஈஸ்வரதேவி, ஈஸ்வரமோகன் (லண்டன்), குகேஸ்வரன் (லண்டன்), கோகுலேஸ்வரன் (லண்டன்), உதயகுமார் (லண்டன்), தயாரஞ்சினி (லண்டன்), சரோஜினி தேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சகலகலாவல்லி, நடராசா (அதிபர், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), தங்கலக்ஸ்மி (லண்டன்), தமயந்தி (லண்டன்), சிவயோகராசா (லண்டன்), இரமேஸ்வரன் (லண்டன்), செல்வராணி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சாலினி, யாழினி, இளங்குமரன், தரன் (லண்டன்), அரன் (லண்டன்), ரமியா (லண்டன்), நித்தியா (லண்டன்), தர்சினி (லண்டன்), சயந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2002 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஈஸ்வரம்பல்'*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

(C/25130)

தகவல்:
கி.நடராசா (மருமகன்)
அ.உதயகுமார்(மகன்)

**LOGIC**
G.A.Q. - Logic
சனி, ஞாயிறு 7 - 8 a.m
2004 - சனி, ஞாயிறு 2-3 p.m.
குறியீட்டு அளவையியல்
By: கமல் (B.A.)
ஆரம்பம் : 30.11.2002
நியூட்டன், யாழ்.நகர்
(1119)


எமது புதிய வெளியீடு
நெப்போலியன், வினிதா, கபாலி நடிப்பில்
★ வாரண்ட்
வீடியோ சிந்து
உரும்பிராய் சந்தி.
(C/25129)

மிகச் சொற்ப பிரதிகளே
**O/L ENGLISH**
முற்றிலும் எதிர்பார்க்கும் மாதிரி வினாத்தாள்கள், கடந்த கால வினாத்தாள்கள் (2001 Dec.) விடைகளுடன்
தொகுப்பு :-
த.தனேந்திரன்
B.Com. [Hons] M.M.Spl. [Jaf.]
H.N.Dip.in.Acc. [cey]
(அனைத்து புத்தகசாலைகளிலும்)
T.P - 0777 - 148532.
(11083)

**BARATHY**
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி
புதிய வகுப்புகள்
5 தொடக்கம் 11 வரை
ஆரம்பம் -1.12.2002
ஞாயிறு 9.00மணி
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினர்
விஞ்ஞானம்
திரு. தேவா
திரு. பாலச்சந்திரன்
கணிதம்
திரு. S.சிவரூபன்
திரு. சிவா
தமிழ்
திரு. குகபரன்
திரு. தமிழ்மாறன்
ஆங்கிலம்
திரு. விஜயபாஸ்கர்
திரு. ஹரிகரன்
சமூகக்கல்வி
திரு. ஜெகன்
தமிழ் இலக்கியம்
திரு. குகபரன்
சமயம்
திரு. தரன்
திரு. சிறி
வர்த்தகம்
திரு. லோகேஸ்வரன்
சுகாதாரம்
திரு. நிறோஜனன்
அனுமதியினை முன்கூட்டி பெற்றுக்கொள்ளவும்.
Note-இவ்வாசிரியர்கள் இப்பிரதேசத்தில் இந்நிறுவனத்தில் மட்டும் தான் கற்பிக்கப்படுவார்கள்.
(11156)

# இதயம் நெகிழ 22 ஆம் ஆண்டு நினைவலைகள்

உதயம் 05 - 06 - 1928



அஸ்தமனம் 29 - 11 - 1980

## அமரர் கந்தையா செல்லத்துரை

(முன்னாள் தலைவர், அரசாங்க பொதுச் சேவை தொழிலாளர் சங்கம் - கச்சேரி, யாழ்ப்பாணம்)

*கருணையின் மறுபதிப்பாய் காணும் வதனம்*
*மட்டற்ற பாசத்தைப் பொழியும் விழிகள்*
*அறநெறியைப் போதிக்கும் அன்பு மொழிகள்*
*அனுப்பொழுதும் தனக்கென்று உழைக்காத கரங்கள்*
*உருகியுழும் வண்ணம் எமைப் புரந்த தலைவா!*
*உங்களது நினைவுகளாய் உதிரும் கணங்கள்*
*இருபத்திரெண்டாண்டு சென்றாலென்ன*
*இதயங்கள் உள்ளவரை உங்கள் நினைவோடு...*

*788A, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர்.* (C/25132)

என்றும் உங்கள்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

விடுமுறைகால சிறப்பு வகுப்பு
திங்கள் முதல் வெள்ளி வரை- 2.00-3.00 p.m
சடமும் கதிர்ப்பும்
By. M.கருணாநிதி
B.Sc.(Spl), Dip.in.Ed.
ஆரம்பம்: 02.12.2002
விடுமுறைக்காலத்தில் இவ்வலகு பூர்த்தியாக்கப்படும்.
**New Science College**
(11166)

பிறைற்றின் கல்வி நிலையம் சங்கத்தானை, சாவகச்சேரி
கல்வியாண்டு 2003
தரம் 5 ⇒11 வரையான வகுப்புக்கள்
ஆரம்பம் :- 02.12.2002 திங்கள் 9.30 a.m.
எமது தனித்துவமான ஆசிரியர் குழு
★ கணிதம் :- N.அருட்சோதிவர்ணன்
★ விஞ்ஞானம் :- N.மகேந்திரன்
★ தமிழ், ★ சமயம் :- T.நாகேஸ்வரன், P.சுகந்தினி
★ ஆங்கிலம் :- திரு.நவரட்ணசாமி, N.சுதந்திரன், K.நிசாந்தன்
★ சமூகக்கல்வியும் :- S.கிருஷ்ணன்
வரலாறும் :- M.பார்த்திபன்
★ வர்த்தகம் :- S.R.J.சுதன்
(11125)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
யூத் (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்)
(11153)

ராஜா யாழ்ப்பாணம்.
3ஆவது வாரம்
அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த



வில்லன் (ரீலஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், மீனா நடித்த
சிற்றிசன்
காட்சிகள்: 11.00, 3.45, 6.00 (புதியநேரம்)
(C/24617)

Computer College
கணனிக் கல்லூரி
Center for Computer Studies CC
337, Kasthuriyar Road, Jaffna
E - Mail : collegeofcom@bharatmail.com
Phone & Fax : 021 - 2223497
பெற்றோர்களே !
நீங்கள் உங்கள் பிள்ளையின் எதிர்காலத்தில் அக்கறையுள்ள ஒருவரா ? ஆம். எனில் உடனடியாக எம்மோடு இணைந்து கொள்ளுங்கள் CC உங்கள் பிள்ளைக்கு வழிகாட்டும்.
பள்ளிச் சிறார்களின் பருவகால விடுமுறையை பயனுள்ளதாக கழிப்பதற்காக டிசெம்பர் 01ஆம் திகதி முதல்
முற்றிலும் வித்தியாசமான முறையில் Kids Computing கற்கை நெறி ஆரம்பமாகவிருக்கின்றது.
Diploma Courses:
Dip. in. Microsoft Office
Dip. in. Desktop Publishing
Dip. in. Web Designing
Certificate Courses in:
Ms - Word, Ms - Excel, Ms - Power point, Ms - Access, Corel DRAW, PageMaker, Photoshop & Internet - E mail.
பொதுத் தகவல் தொழில் நுட்பம்
www.computercollege.ac.lk

# 'வணிகத் தளிர்' வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட மகாவித்தியாலய வணிக மாணவர் மன்றத்தின் 'வணிகத் தளிர்' சஞ்சிகையின் ஏழாவது இதழ் இன்று காலை 9 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இந்த நூலுக்கு ஆசியுரையினை அருட்தந்தை எம்.செல்வரட்ணம் வழங்குவார். அறிமுக உரையினை யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வி.ஈஸ்வரி நிகழ்த்தவுள்ளார். (ஒ-12)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தாமோதரம்பிள்ளை இராசம்மா

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தாமோதரம்பிள்ளை இராசம்மா நேற்று (28.11.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வீரவாகு - மாணிக்கம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற டெனியா தாமோதரம்பிள்ளையின் (பிரபல வர்த்தகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சிவக்கொழுந்து, செல்லம்மா ஆகியோரின் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (இராசா), பாக்கியலெட்சுமி (கனடா), இராஜலட்சுமி, இராசேந்திரன் (N.T.R.ரான்ஸ்போட்), புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணிதேவி, பரமசாமி, சிவலிங்கம் (சிவலிங்கம் மோட்டோர்ஸ்), காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் செல்வராணி, காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் வரதராஜன், பரமேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2002) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*சுருவில் வீதி, புளியங்கூடல்.* (11167)

தகவல்:
N.T.இராசேந்திரம்
(முன்னாள் டெனியா வர்த்தகர்)
N.T.R. ரான்ஸ்போட், யாழ்ப்பாணம்.

## பஸ்தியாம்பிள்ளை கிறிஸ்தோப்பர்

கரவெட்டியைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை கிறிஸ்தோப்பர் அவர்கள் நேற்று (28.11.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீமாம்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை - இசபெல்லா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரேசாவின் அன்புக் கணவரும் கிருஷ்டி இரட்ணகுமார், அருட்திரு ஜோர்ஜ் ஜெயக்குமார், இரட்ணகுமாரி புஸ்பராசா, ஜோசப் ஜீவகுமார், இசைபெல்லா ஜெயக்குமாரி, றெக்ஸராஜகுமார், டன்சன் நிமலகுமார், கிருசாந்தா கோபி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.* (11168)

தகவல்:
அருட்திரு. L.G.ஜெயக்குமார்
(மகன்)

## கணபதிப்பிள்ளை பொன்னையா

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்தவரும் தற்பொழுது குடமியன் வரணியில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை பொன்னையா அவர்கள் நேற்று (28.11.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, சரஸ்வதி, தம்பிராசா (ஓய்வுபெற்ற நீதிமன்ற அலுவலர்), சிவராசா, புஸ்பவதி, குணராசா, செல்வராசா, விமலாவதி (கல்வி அமைச்சு, திருகோணமலை), கமலாவதி, தயாவதி (வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி) காலஞ்சென்ற தர்மராசா மற்றும் தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், கனகலிங்கம் மற்றும் பாலகிருஷ்ணன், புனிதவதி, வசந்தி, சின்னப்பிள்ளை, சாந்தி, செல்வநாயகம், இராஜ்குமார், அசோகன், அனுஷ்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.11.2002) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குடமியன், வரணி.* (11165)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஆதாம் தோமாஸ்

பருத்தித்துறை, சின்னத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆதாம் தோமாஸ் அவர்கள் நேற்று (28.11.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் றெஜினா வினிவிரெட்டின் அன்புக் கணவரும், அன்ரன் சந்தானராசா (ஜேர்மனி), சந்தானராணி, அருட்சகோதரி இசபெல்லா (யாழ் திருக்குடும்ப மாகாண இல்லம்), பிரான்சிஸ் லூர்துராசா (இத்தாலி), செபஸ்ரியன் ஜோசப் அமலதாஸ், அன்ரன் மேரிராஜன் (இத்தாலி), அன்ரன் தோமாஸ், ஆரோக்கியராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோசப் ஏற்றியன், சந்திரோதயம் (ஜேர்மனி), அமலா (இத்தாலி), சந்திரா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (29.11.2002) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனை இடம்பெற்று பின்னர், புனித சோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கடற்கரை வீதி, பருத்தித்துறை.* (C/25138)

தகவல்:
றெஜினா வினிவிரெட் (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்
அருட்சகோதரி இசபெல்லா

## ஆறுமுகம் இராஜரட்ணம்

(இளைப்பாறிய அதிபர் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

வதிரி, கதிர்காம கோவிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் இராஜரட்ணம் அவர்கள் நேற்று (28.11.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தருமநாயகி அவர்களின் அன்புக் கணவரும் வரதீஸ்வரன் (பிரதேச செயலர், மன்னார்), வசந்தராசா (டென்மார்க்), ரஞ்சன், ராதிகா, தேவிகா, உதயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2002) வெள்ளிக்கிழமை பி.ப 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி.* (C/25137)

தகவல்:
இ.உதயகுமார்
(மகன்)

# ஜனாதிபதி-பிரதமர் நேற்றுச் சந்திப்பு

ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான ஆதரவு மாநாடு தொடர்பாக ஜனாதிபதி திருப்தி வெளியிட்டார். ஒஸ்லோ மாநாடு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து விளக்கமளித்தார்.

இச்சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, சமாதானம் தொடர்பான தனது கருத்துக்களுக்கும் அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலர் ஆர்மிடேஜ் தெரிவித்த கருத்துக்களுக்கும் ஒற்றுமை இருந்ததை பிரதமருக்குச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளின் நீதிமன்றங்கள், பொலீஸ் நிலையங்கள், வங்கிகள் இயங்கினால் அவற்றை மூடிவிடுமாறு பிரதமர் வெளியிட்ட உத்தரவை ஜனாதிபதி வரவேற்றார். எனினும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கும் இத்தகைய நிறுவனங்களையும் மூடிவிடுவதற்குரிய உத்தரவை பிரதமர் பிறப்பிக்க வேண்டுமென ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். இதன்போது குறுக்கிட்ட பிரதமர், தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் பல வருடங்களாக இத்தகைய நிறுவனங்களை நடத்தி வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இதனை நிராகரித்த ஜனாதிபதி, புலிகளின் அலுவலகங்கள் பற்றி தற்போதே தகவல்கள் வெளியாகியுள்ளன எனத் தெரிவித்தார்.

நடைமுறை பேச்சுக்களில மூன்று தரப்பினர் மாத்திரமே பங்குபற்றி வருகின்றனர். இந்நிலை மாற்றப்பட்டு சமாதான முன்னெடுப்புக்களுக்காக அனைத்துக் கட்சியினரும் உள்ளடக்கப்படவேண்டும் என ஜனாதிபதி இச் சந்திப்பில் பிரதமரிடம் தெரிவித்தார். (ஐ)

## 2ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறும்.

தாய்லாந்தில் இரண்டாவது சுற்றுப்பேச்சுக்களில் பங்குபற்றிய பிரதிநிதிகளே தற்போது மூன்றாவது சுற்றிலும் அனேகமாகப் பங்குபற்றுவர். அதில் மாற்றம் ஏதும் இருப்பதாக எமக்கு அறிவிக்கப்படவில்லை.

இம்முறை மூன்று முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிகின்றது.

ஒன்று - யுத்தநிறுத்த உடன்பாட்டு ஏற்பாடுகளை மேலும் வலிமையான முறையில் நடைமுறைப்படுத்துதல், உயர்பாதுகாப்பு வலயங்கள், சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டுதல் போன்ற விடயங்களும், இது தொடர்பாக ஓமந்தை, முகமாலை மற்றும் மாவட்டங்களில் நடத்தப்பட்ட உபகுழுக் கூட்டங்கள் ஆகியவை குறித்து விவாதிக்கப்படும்.

இரண்டு - உதவும் நாடுகள் மூலம் கிடைத்துள்ள நிதியை பயன்தரத்தக்க விதத்தில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து விரிவாக ஆராயப்படும். இந்தநிதியை எங்கு வைப்பிலிடுவது, எவ்வாறு பேணுவது என்பது குறித்தும் என்ன முறையில் அதைச் செலவிடுவது என்பது குறித்தும் அனேகமாகத் தீமானிக்கப்படும். புனர்வாழ்வு தொடர்பாக கிளிநொச்சியில் நடைபெற்ற உபகுழுக் கூட்டத்தின் முடிவுகள் இங்கு விவாதிக்கப்படும்.

மூன்றாவது - இனப்பிரச்சினைக்குக் காரணமான அடிப்படைவிடயங்கள் பற்றிய அரசியல் குழுவின் செயற்பாடுகள், அடிப்படை விடயங்கள் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்படும்.

- இப்படி எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார். (ஐ-12)

புதிய பிரிவு
கணக்கீடு
திரு. பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2004
வங்கி
கணக்கிணக்கக்கூற்று
Sat, Sun => 7-8. a.m.
ஆரம்பம் : 30.11.2002
Sat => 7 a.m.
விக்னா
கல்வி நிறுவனம்

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது என்று இலங்கை வானொலி தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரும் சிரேஷ்ட அதிகாரிகளும் கூட்டத்தில் பங்குகொள்ள இருக்கின்றனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அடுத்த கட்ட ஒஸ்லோ மாநாட்டில் விவாதிக்கப்பட இருப்பதாக உள்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்திருக்கிறார். (ஐ-12)

## பொலீஸ் காவலரண் மாத்தளையில் தாக்குதல்

கொழும்பு,நவ.29

மாத்தளை பொலீஸ் நிலையக் காவலரண் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் பொலீஸார் ஒருவரும் இரு ஊர்காவற்படையினரும் காயமடைந்துள்ளனர்.

மாத்தளையில் இருந்து அளவத்தை நோக்கிச் சென்ற வாகனத்தில் பயணம் செய்த இனந் தெரியாத நபர்கள் கலக்கடுவ காவலரண் மீது நடத்திய தாக்குதலிலேயே இவர்கள் காயமடைந்துள்ளார்கள்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மாத்தளைப் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-12)

## ஒளி விழா

யாழ்ப்பாணம்,நவ.29

கோப்பாய் ஆசிரிய கலாசாலை கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம் நடத்தும் ஒளிவிழா இன்று வெள்ளிக் கிழமை ஒன்றியத்தின் தலைவர் எம். டொமினிக் ஜீவா தலைமையில் கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட் தந்தை எம்.டேவிற் அடிகளார் பிரதம விருந்தினராகவும், பரியாக்கோபு ஆலய பங்குத் தந்தை அருட் திரு ரி.ஜோர்ஜ் அடிகளார், யாழ் மறை மாவட்ட மறைக் கல்வி இயக்குநர் அருட்திரு ஜே.மௌனிஸ் அடிகளார் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-ரி)

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் விளக்கமளிப்பார்.

புலிகளுடன் அரசு மேற்கொண்டு வரும் சமாதானப் பேச்சுக்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரதமர் விளக்கவுரை நிகழ்த்துவார்.

அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று இதனைத் தெரிவித்தார். (ஐ)

## தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது. காலை 9.30 மணியளவில் கேணல் கருணாவை ஏற்றிக் கொண்டு அந்த ஹெலிகொப்டர் புறப்பட்டது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் மூன்றாம் கட்ட சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றவே இவர் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்று புலிகள் தெரிவித்தனர். (ஐ-12)

# வீட்டில் திருடப்பட்ட கதவுகள் விற்பனை நிலையத்தில் மீட்பு!

யாழ்ப்பாணம்,நவ.29

நாவற்குழிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் களவாடப்பட்ட மரக் கதவுகள் தாவடிப் பகுதியில் உள்ள தளபாட விற்பனையாளரிடம் இருந்து மீளப் பெறப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் வீட்டின் உரிமையாளர் கடந்த வாரம் நாவற்குழியில் உள்ள தனது வீட்டைப் பார்வையிடச் சென்றபோது வீட்டின் அனைத்துக் கதவுகளும் களவாடப்பட்டிருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தார்.

வீட்டின் பாதுகாப்புக் கருதி வேறு பழைய கதவுகளை என்றாலும் வாங்கி போடுவதற்காக தாவடிப் பகுதியில் உள்ள பழைய தளபாட விற்பனை நிலையத்துக்கு சென்று பார்வையிட்டபோது அடுக்கி வைக்கப்பட்டிருந்த கதவுகளுடன் தனது வீட்டுக் கதவுகளும் அடுக்கி வைத்திருப்பதைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார்.

வீட்டின் உரிமையாளர் தெரிவித்த போதிய விவரங்களை அடுத்து பணம் எதுவும் பெற்றுக் கொள்ளாமலே தளபாட விற்பனையாளர் உரியவரிடம் கதவுகளை ஒப்படைத்துள்ளார்.

தனக்கு எவ்வாறு இந்தக் கதவுகள் கிடைத்தன என்பது பற்றிய விவரத்தை அந்த விற்பனையாளர் கூற மறுத்து விட்டார். என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-ரி)

## எதிர்க் கட்சியினரின் விவாதக் கோரிக்கை

ஒஸ்லோ மாநாடு பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தவேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கு அரசினர் இணங்கினர். நேற்று மாலை விவாதத்தை நடத்த ஏற்பாடு செய்தனர். ஆயினும் எதிர்க் கட்சியினர் பின்னர் அந்தக் கோரிக்கையை கைவிட்டு விட்டனர்.

பிரதமர் இன்று சபையில் அறிக்கை விடுக்க இருப்பதால், அதன் பின்னர் விவாதம் நடத்துவது பயன் உள்ளதாக இருக்கும் என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். (ஐ)

## பிரபாவின் மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பீரிஸ், புலிகளின் தலைவரின் உரைக்கு வரவேற்புத் தெரிவித்தார்.

ஒஸ்லோ மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரையை சில ஊடகங்கள் தவறான அர்த்தம் கொடுத்து பிரசுரித்துள்ளன என்று அமைச்சர் பீரிஸ் இம்மாநாட்டில் குற்றஞ்சாட்டினார்.

செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

"தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டத்தை விரும்பவில்லை. அரசியல் தீர்வையும், இதயசுத்தியுடன் நடத்தப்படும் பேச்சு ஒன்றின் மூலம் நிரந்தர சமாதானத்தையும் காணவே விரும்புகின்றோம்" என்று பாலசிங்கம் மிக உறுதியாகத் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் பிரபாகரனும் கருத்துக் கூறியுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பிரதேச சுயாட்சி ஒன்றைக் காணவே துடிக்கின்றோம். தனிநாட்டுக் கோரிக்கையில் இருந்து நாம் விலகிச் செல்கின்றோம் என்று புலிகளின் தலைவர் அந்த உரையில் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஒஸ்லோ மாநாட்டில் ஏரே அறைக்குள் அதிகாரமிக்க சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் மிகவும் நெருக்கமாகவும் புரிந்துணர்வுடனும் கலந்துபேசும் வாய்ப்புக் கிட்டியது. அதேவேளை, மாநாட்டுக்கு முன் அன்ரன் பாலசிங்கமும் நானும் தனி அறையில் தத்தமது அரசியல் நிலைப்பாடுகள், அதற்கான தடங்கல்கள், ஆராயப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக மனம் விட்டுப் பேசினோம்.


புலிகள் ஆயுதப் போராட்டத்தைக கைவிட்டு, சமாதானப் பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணவே விரும்புகின்றனர் என்பதை சர்வதேச அரசியல் தலைவர்களும் இப்பொழுது அங்கீகரித்துள்ளனர்.

இதன் பயனாகவே இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 7 கோடி அமெரிக்க டொலர்கள் ஆரம்பகட்ட உதவிகளாகக் கிடைத்துள்ளன.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் பங்களிப்புடன் மே மாதம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு டோக்கியோவில் நடைபெறும் இம்மாநாட்டில் நாம் எதிர்பார்ப்பதை விடக் கூடுதலான தொகை கிடைக்கும். ஒஸ்லோ மாநாடு இதற்கு உறுதியான அடித்தளம் இட்டுள்ளது.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் கூறினார். (ஐ)

RAMCO CEMENT
ராம்கோ சிமெந்து
இலங்கையில் மட்டுமா இல்லை
இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை
ஆசியாவில் முதலாம் தர (நம்பர் 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்படும் RAMCO சிமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
எமது வாடிக்கையாளர்களுக்கு! ராம்கோ சிமெந்து வந்துவிட்டது! முன்கூட்டியே பதிவு செய்யவும்! போக்குவரத்து விநியோகம் இலவசம்!!
முக்கிய குறிப்பு :
சூடாநாட்டு மக்களின் பல கோடி ரூபா பணத்தை மிதப்படுத்திய சிமெந்து ராம்கோ சிமெந்து
ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்
ஈஸ்வரபகவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், T.P.: 021 222 2350

உங்கள் குழந்தையை நவீன உலகோடு இணைத்துவிட்டீர்களா?
Baby dod com
அறுவம்
தேர்ச்சியோடு எமது சிறார்களுக்கான விடுமுறைகால வகுப்புக்களில் உங்கள் குழந்தைகளை இணைத்துக் கொள்ளுங்கள்.

ஆரம்பம்
30.11.2002, 1,4.12.2002
10.00a.m
For further details
Director
STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kanthar madam, Jaffna TP 021-2222674

NIRU TUITION CENTRE
STATION ROAD, KONDAVIL
கல்வியாண்டு 2003
தரம் 4 முதல் 11 வரை வகுப்புகள்
ஆரம்பம்: 2002.12.01 ஞாயிறு காலை 7 மணி
எமது ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| கணிதம் | ஆங்கிலம் | சமூகக்கல்வி |
| திரு. இந்திரன் | திரு. சந்திரமௌலி | திரு. வேலா |
| திரு. ரமேந்திரன் | திரு. சந்திரசேகரம் | திரு. சிவனேசன் |
| திரு. அருட்பிரகாசபிள்ளை | திரு. கணேசலிங்கம் | திரு. மயூரன் |
| தமிழ் | திரு. ரமேஸ் | வர்த்தகம் |
| திரு. சந்திரசேகர் | விஞ்ஞானம் | திரு. நாதன் |
| திரு. பிரதீஸ் | திரு. இரா. செல்வவடிவேல் | சமயம் |
| செல்வி சந்திரகலா | திரு. சங்கரதாஸ் | திரு. பிரதீஸ் |
| செல்வி கலையரசி | திரு. S.T. லிங்கம் | |

(11057)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இஸ்ரேலியரை இலக்குவைத்து கென்ய நகரில் தாக்குதல்கள்!

மும்பாசா,நவ.29

கென்யாவில் இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட வெடி குண்டுத் தாக்குதலில் குறைந்தது 8 பேர் கொல்லப்பட்டனர். இதே வேளை, 200 பயணிகளுடன் கென்ய விமான நிலையத்திலிருந்து புறப் பட்ட இஸ்ரேலிய விமானம் ஒன்று ஏவுகணைத் தாக்குதலிலிருந்து மயி ரிழையில் தப்பியது.

கென்யாவின் இந்து சமுத்திரக் கரை நகரான மும்பாசாவிலுள்ள 'பர டைஸ்' ஹோட்டலிலேயே குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த ஹோட்டல் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளால் அதிகள வில் பயன்படுத்தப்பட்டுவந்தது.

இந்த ஹோட்டலுக்கு நேற்று வந்த சுமார் 60 இஸ்ரேலிய சுற்று லாப் பயணிகள், அறைகளை பதிவு செய்து கொண்டிருந்ததாகவும் -

அப்போது சிவப்பு நிறக் கார் ஒன்று கண்ணாடிக் கதவுகளைத் தகர்த்த படி ஹோட்டலின் வரவேற்பு பகுதிக் குள் நுழைந்து வெடித்துச் சிதறிய தாகவும் -

நேரிற் கண்டவர்கள் தெரிவித் தனர்.

இச்சம்பவத்தில் இரு சிறுவர்கள் உட்பட 8 இஸ்ரேலியர்கள் கொல லப்பட்டதாகவும் -

ஹோட்டல் பணியாளர் ஒருவர் உட்பட 7 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டது. இச்சம்பவம் இடம்பெற்ற அதேவேளையில், மும்பாசா விமான நிலையத்திலிருந்து இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவ் நோக்கிப் புறப்பட்ட பயணிகள் விமானத்தை இரு ஏவுகணைகள் தாக்க முயன் றன. ஆயினும், விமானம் மயிரிழை யில் தப்பியது. ஏவுகணைகளில் ஒன்று தாக்கியதில் விமானத்தில சிறு சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படு கிறது.

இந்தத் தாக்குதல்களுக்கு எவ ரும் பொறுப்பேற்கவில்லை.

எதிர்வரும் ஜனவரி மாதம் நடை பெறவுள்ள இஸ்ரேலியப் பிரதமர் பதவிக்கான தேர்தலில் போட்டியி டும் பிரதமர் ஏரியல் ஷெரோனுக் கும் அவரது போட்டியாளரும் வெளி விவகார அமைச்சருமான பினயமின் நெதன்யாகுவுக்கும் இடையே ஆரம்ப கட்டத் தேர்தல் நேற்று இடம்பெற் றது. இச்சமயத்தில் கென்யாவில் இஸ்ரேலியர்களை இலக்கு வைத்துத் தாக் குதல் நடந்துள்ளமை குறிப் பிடத் தக்கது. (ஒ)

# இஸ்ரேலிய ஏவுகணை வீச்சில் பலஸ்தீனத் தலைவர்கள் பலி!

லண்டன்,நவ.29

மேற்குக்கரையில் இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட வான் தாககு தலில் பலஸ்தீனத் தீவிரவாதத் தலை வர்கள் இருவர் கொல்லப்பட்டனர்.

ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த இமாட் நஷார்தி, அல் அகுஸா படை யணியைச் சேர்ந்த அலா சபா ஆகி யோரே கொல்லப்பட்டவர்களாவர்.

ஜெனின் நகரப் பலஸ்தீன அகதி முகாமிலுள்ள வீடொன்றை இஸ்ரே லிய ஹெலிகள் ஏவுகணைகளைப் பயன்படுத்தி தாக்கின. இதில் அந்த வீட்டில் தங்கியிருந்த பலஸ்தீனத் தீவிரவாதத் தலைவர்கள் இருவரும் உயிரிழந்தனர்.

தாக்குதலுக்குள்ளான வீட்டில் தீவிரவாதிகள் ஆலோசனைக் கூட்ட மொன்றை நடத்தியதாகத் தமக்குத் தகவல் கிடைத்ததாகவும் -

அதனையடுத்தே தாக்குதல் நடத் தப்பட்டதாகவும் -

கொல்லப்பட்ட இருவரும் தம் மால் தேடப்பட்டுவந்த பலஸ்தீனத் தீவிரவாதிகள் என்றும் -

இஸ்ரேலிய இராணுவம் தெரிவித் தது. இதற்கிடையில் -

பதிவுசெய்யப்பட்ட தொலை பேசி உரையாடல் ஒன்றை இஸ் ரேல் வெளியிட்டுள்ளது. இஸ்ரேலிய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கடந்த வெள்ளிக்கிழமை பலியான ஐ.நா.பணியாளர் ஹூக் சுடப்பட்ட சம யம் நடத்திய உரையாடல் இதுவென இஸ்ரேல் கூறுகிறது.

ஐ.நா.அலுவலகத்துக்குள் பலஸ் தீன துப்பாக்கிதாரி ஒருவர் நுழைந் துள்ள தகவலைத் தெரிவிப்பதாக அந்த தொலைபேசி உரையாடல் அமைந்துள்ளது.

ஐ.நா. அலுவலக வளாகத்தி லிருந்த துப்பாக்கிதாரியை நோக்கிச் சுட்டபோதே ஹூக் உயிரிழந்ததாக இஸ்ரேல் வாதிடுகிறது. (ஒ)

# வைகோ கைது செய்யப்பட்டதில் 'பொடா' தவறாகப் பயன்பட்டுள்ளது!

## வெங்கையா நாயுடு தெரிவிப்பு

மறுமலர்ச்சி திராவிட முன்னேற் றக்கழகப் பொதுச் செயலாளர் வைகோ தமிழக அரசால் கைதுசெய் யப்பட்ட விவகாரத்தில் 'பொடா' சட் டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள் ளது.

- இவ்வாறு பாரதிய ஜனதாக் கட்சி யின் தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்தார். சென்னை விமான நிலை யத்தில் நேற்றுமுன்தினம் செய்தி யாளர்களிடம் உரையாற்றியபோதே அவர் இதனைத்தெரிவித்தார்.

வைகோ கைதானதன் பிறகு, 'பொடா' சட்டத்தைத் தவறாகப் பயன் படுத்தியே தமிழக அரசு அவரைக் கைதுசெய்துள்ளதாக பாரதீய ஜன தாக் கட்சியின் தலைவர் ஒருவர் பகி ரங்கமாகக் கூறியிருப்பது இதுவே முதன்முறையாகும்.

தான் கைதுசெய்யப்பட்டமை சட்டவிரோதமானது என்று வைகோ உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். இந்த நிலையில் வெங் கையா நாயுடு தெரிவித்துள்ள இக் கருத்து, மனுமீதான தீர்ப்பை முன் கூட்டியே பிரதிபலிக்கக்கூடும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, மதமாற்றத் தடைச் சட்டத்தைப் பிறப்பித்தமை உட்பட பாரதீய ஜனதாவைத் திருப் திப்படுத்தி அக்கட்சியுடன் நெருங்க பிரயத்தனம் செய்து வரும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு வெங் கையா நாயுடுவின் கருத்து அடியா கவே அமையும் என்று கருதப்படு கிறது. (ஒ)

# செப்ரெம்பர் 11 தாக்குதலில் இறந்ததாக மோசடி புரிந்த சீனருக்கு சிறை!

நியூயோர்க்,நவ.29

அமெரிக்காவின் நியூயோர்க் நக ரில் உலக வர்த்தக மையக் கட்டடம் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி தகர்க்கப்பட்டபோது, இறந்த வர்களில் தானும் ஒருவன் என்று பதிவுசெய்ய முயன்ற சீன இளைஞர் சிக்கினார்.

ஸ்டீவன் சின் லுவங்(வயது 28) என்ற அந்த நபருக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள் ளது.

சம்பவம் நடந்த உடனேயே லுவங் தனது சட்டத்தரணிக்குத் தொலை பேசிமூலம் தொடர்புகொண்டார். ஆனால், தான் லுவங்கின் சகோதரன் என்று சொல்லிக்கொண்டு, லுவங்கைக் காண வில்லை என்று தெரிவித்துள்ளார். ஒரு கடவுச்சீட்டு மோசடியிலிருந்து தப்பிக்கொள்ள அவர் இவ்வாறு செய் திருக்கிறார் என விசாரணையில் தெரிய வந்தது.

லுவங் உலகமையக் கட்டடத்தில் செயற்பட்ட ஒரு நிறுவனத்தின் தற் காலிக பணியாளர். அந்த நிறுவனத் தைச் சேர்ந்த 658 பணியாளர்கள் விமானத் தற்கொலைத் தாக்குதலில் இறந்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கிலேயே லுவங்குக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஒ)

## 2ஆவது நாளாக ஆயுதசோதனை!

ஐ.நா.சபையின் ஆயுதக்கண் காணிப்பாளர் குழு இரண்டாவது நாளாக நேற்று வியாழக்கிழமை ஆயுத சோதனையை மேற்கொண் டது. சந்தேகப் பட்டியலிலுள்ள 700 இடங்களில் பலவற்றுக்கு, அக் குழு வினர் இரு பிரிவாகச் சென்று சோதனை நடத்தினர். ஈராக்கின் தேசிய கண் காணிப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர் களும் பத்திரிகையாளர்களும் அவர் களுடன் சென்றனர். (ஒ)

# 40 கோடி ஒளி ஆண்டு தூரத்தில் இரு பெரும் கருந்துளைகள்

வாஷிங்ரன்,நவ.29

அண்டவெளியில் உள்ள நட்சத் திரக் கூட்டம் ஒன்றில், பத்து லட்சம் சூரியன்களின் ஆற்றல் மற்றும் அடர்த் தியைக் கொண்ட இருபெரும் கருந் துளைகள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஒளியைக்கூட வெளியே விட்டு விடாத அளவுக்கு ஈர்ப்பு விசையும் வெப்பமும் அடர்த்தியும் கொண்டவை இந்தக் கருந்துளைகள். அவற்றின் ஈர்ப்பு விசையிலிருந்து தகிக்கும் சூரியன்கள்கூடத் தப்பமுடியாது. அவற் றையும் தம்முடன் ஈர்த்து இழுத்துக் கொள்ளக்கூடியவை கருந்துளைகள்.

ஒரே நட்சத்திர மண்டலத்தில் அத் தகைய இரு பெரும் கருந்துளைகள இருப்பது விண்வெளி ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டு இருப்பது இதுவே முதன்முறையாகும்.

விண்ணில் சுற்றிக்கொண்டு இருக் கும் சந்திரா விண்வெளி ஆய்வு நிலையத்திலுள்ள தொலைநோக்கியும ஹம்பிள் தொலைநோக்கியும் அவற் றைப் படம்பிடித்து பூமிக்கு அனுப்பி யுள்ளன.

பூமியிலிருந்து 40 கோடி ஒளி ஆண்டுத் தொலைவில் (ஒரு ஒளியாண் டானது ஒளியானது ஓராண்டு காலத் தில் பயணம் செய்யும் தூரம்) இருக் கும் அந்த நட்சத்திரக் கூட்டத்தின் பெயர் என்ஜிசி 6240. அதில்தான் இரு கருநதுளைகளுமுள்ளன. அவை ஒன்றையொன்று சுற்றிவருகின்றன. இன்னும் பல கோடி ஆண்டுகளில் அவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒரே கருந்துளையாக மாறிவிடும் என்று மசாசூசெட்ஸில் உள்ள ஹோர்வர்ட் பல்கலைக்கழ கத்தின் சந்திரா ஆய்வு மையம் கூறு கிறது.

இந்த இரு கருந்துளைகளின் மையப்புள்ளிகளையும் தனித் தனியே படம் பிடித்து, அவற்றிலிருந்து வெளி யாகும் 'எக்ஸ்' கதிர்களின் விவரங் களையும் தெரிவித்துள்ளது சந்திரா ஆய்வு நிலையம்.

சிறிய நட்சத்திரக் கூட்டங்கள் ஒன்று டன் ஒன்று மோதுவதன் மூலமும் இணைவதன் மூலமும் எவ்வாறு பிர மாண்டமான நட்சத்திர கூட்டங்கள் உருவாகின்றன, நட்சத்திரங்கள் எவ்வாறு பிறக்கின்றன என்பதற்கு இரு கருந்துளைகளைக் கொண்ட என ஜிசி 6240 ஓர் எடுத்துக்காட்டு என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (ஒ)

# தி.மு.க.பிரமுகர்களின் வீடுகளில் சோதனை

சென்னை,நவ.29

தமிழகத்தில் தி.மு.கவின் முன் னாள் அமைச்சர்கள் க.அன்பழகன், கே.என்நேரு மற்றும் ஐ.பெரியசாமி ஆகி யோர் வீடுகளில் நேற்றுக் காலை 9 மணியளவில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில இடம் வழங்குவதில் நிகழ்ந்த முறை கேடுகள் தொடர்பாக அன்பழகன் வீட்டிலும், வருமானத் திற்கு மீறிய சொத்து சேர்த்ததான வழக்கிற்காக நேரு மற்றும் பெரியசாமி வீடுகளி லும் சோதனை நடத்தியதாக லஞ்ச ஒழிப்புத் துறை வட்டாரங்கள் தெரி வித்தன. (ஒ)

# டொலருக்குத் தடைவிதிப்பு!

பெற்றோலிய விநியோகத்தை அமெ ரிக்கா நிறுத்தியதற்குப் பதிலடியாக அமெரிக்க டொலர்களுக்கு வடகொ ரியா தடைவிதித்துள்ளது.

அமெரிக்க டொலர்களை வேறு நாடுகளின் பணமாகவோ அல்லது யூரோவாகவோ இம்மாத இறுதிக்குள மாற்றிக்கொள்ளுமாறும் -

சர்வதேச பணப் புழக்கத்துக்கு டொலருக்குப் பதிலாக வடகொரியர் கள் யூரோவைப் பயன்படுத்துமா றும் -

வடகொரிய அரசு அறிவுறுத்தி யுள்ளது. (ஒ)

# அமெ. விமானங்களை விரட்டியதாக ஈராக்கிய இராணுவம் அறிவிப்பு!

ஈராக்கின் தென் பகுதியில் நுழைந்த அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் போர் விமானங்களை ஈராக்கின் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் விரட்டியடித்தன.

ஈராக்கின் இராணுவ செய்தித் தொடர்பாளர் இதைத் தெரிவித்தார்.

'குவைத் நாட்டிலிருந்து வந்த விமா னங்கள் ஈராக்கின் வான் எல்லைக் குள் நுழைந்தன. அவற்றை விமான எதிர்ப்பு ஏவுகணைமூலம் விரட்டியடித் தோம்' என்றார் அவர்.

குவைத்மீது ஈராக் படையெடுத்த பிறகு அமெரிக்கப்படைகள் ஈராக் இராணுவத்தினரை விரட்டியடித்தன. அதன்பிறகு குவைத்தில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் தங்கி யுள்ளன. (ஒ)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் கொலம்பியப் படையினர் பலி!

லண்டன்,நவ.29

கொலம்பியாவின் கிழக்கு மாகாண மான கஸனாரில் தீவிரவாதிகள் நேற்று நடத்திய கார்க் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 9 படையி னர் கொல்லப்பட்டனர். கடந்த மூன்று நாள்களில் பாதுகாப்புப் படையினர் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக் குதல் இதுவாகும்.

இப்பகுதியில் தீவிரவாதிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் புத்துமாயோ மாகாணத்தில் இருந்து ஹுய்லா மாகாணத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் தடையரண் ஒன்றை அமைக் கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த படை யினர்மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படையே(எவ்.ஏ.ஆர்.சி.) இந்தத் தாக்கு தலை நடத்தியதாகப் படைத் தரப் புத் தெரிவிக்கின்றது.

கடந்த திங்களன்றும் எவ்.ஏ.ஆர். சியினர் படையினர்மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். இதில் 14 படை யினர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில், நகரசபை உறுப் பினர்கள் தமது இலக்கு என்று எவ்.ஏ. ஆர்.சியினர் அறிவித்துள்ளனர். இத னால், நகரப் பகுதிகளில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ம)

# கால்களால் எழுதி 'எம்.ஏ.' படிக்கும் தமிழக இளைஞனின் விடாமுயற்சி!

தமிழகத்தில் இரு கைகளும் இல் லாததால் கால்களாலேயே எழுதி 'எம்.ஏ' பட்டப்படிப்பு படித்து வருகி றார் இளைஞர் புகழேந்தி.



விருத்தாசலம் தென்கோட்டை வீதியைச் சேர்ந்த உமாபதி என்ப வரின் மூத்தமகன் புகழேந்தி(வயது24). புகழேந்திக்கு பிறக்கும்போதே இரு கைகளும் இல்லை.

சென்னை பாலவாக்கத்திலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கான பாட சாலையில் சேர்ந்து 10ஆம் வகுப்பு வரை படித்தார். அப்போது இரு கால் களாலும் அனைத்து வேலைகளை யும் செய்யக் கற்றுக்கொண்டார்.

இவர் இடது காலால் காகிதத் தைப் பற்றிக்கொண்டு வலது காலால் இயல்பாக எழுதுகிறார். உடை அணி வதற்கு மட்டுமே மற்றவர் உதவி அவருக்குத் தேவை.

அண்ணாமலைப் பல்கலைக்கழ கத்தில் புகழேந்தி திறந்த வெளிக் கல்வி முறைமூலம் எம்.ஏ. பொருளா தாரம் பயிலத் தொடங்கியுள்ளார். முதலாம் ஆண்டுக்கான 4 பாடங் களையும் எழுதி தேர்ச்சி பெற்றுள் ளார். 2ஆம் ஆண்டு பாடங்களைப் படித்துக்கொண்டிருக்கிறார்.

கால்களை மட்டுமே பயன்படுத்தி நீச்சலடிக்கவும் தன்னால் முடியும் என்றும் இவர் கூறுகிறார். (ஒ)

# தலித் என்று வருபவர்களுக்கு ஆலயத்துள் அனுமதியில்லை!

## இப்படிக் கூறுகிறார் ஜயேந்திரா

சென்னை,நவ.29

'தலித் என்ற பெயரில் வந்தால் எந்த கோயிலிலும் தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்கமாட்டோம்' என்றார் காஞ்சி காமகோடி பீடத்தின் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். தாழ்த்தப்பட்ட 'தலித்' மக்களை ஆலயங்களுக்குள் அனுமதிப்பது தொடர்பாக செய்தியா ளர்களிடம் பேசியபோதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தலித் என்ற பெயரில் வந்தால், அவர்களில் கிறிஸ்தவர்களும் இருப் பார்கள். எனவே, அவர்களை எந்தக் கோயிலிலும் விடமுடியாது.

ஆதி திராவிடர்கள் இந்துக்களில் ஓர் அங்கம். ஆனால், தலித், என்று வந்தால் அவர்கள் எல்லா உரிமை களையும் இழக்கிறார்கள் - என்றார் அவர்.

சின்ன சேலம் பகுதியிலுள்ள ஐயனார் ஆலயத்துக்குள் தலித்துகள் செல்ல அனுமதிக்கும்படி விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் போராட்டம் நடத்தி யதும் -

இதனைத் தொடர்ந்து அந்த ஆல யம் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதும் - குறிப்பிடத்தக்கவை. (ஒ)

# வெற்றி வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்



## 1ம் பரிசு புத்தம் புதிய மிட்சுபிஷி லான்ஸர்

## ஜனரதக் காப்புறுதியைப் பெற்று வெற்றிபெறுங்கள்




4 ஆம் பரிசு சொகுசான வரவேற்பறை தளபாடங்கள்
5 ஆம் பரிசு காஸ் இலெக்ட்ரிக் குக்கர்
6 ஆம் பரிசு LG இரண்டு கதவுகள் கொண்ட குளிர்சாதனப் பெட்டி
7 ஆம் பரிசு LG தன்னியக்க துணிகழுவும் இயந்திரம்
8 ஆம் பரிசு LG VCD ஹை ஃபை சிஸ்ரம்
9 ஆம் பரிசு LG DVD பிளேயர்
10 ஆம் பரிசு பயனியர் கார் CD ரேடியோ (ஸ்பீக்கருடன்)

## 2 மாதங்களுக்கு ஒரு முறை பரிசு பெறுங்கள்!

1 ஆம் பரிசு சிசில் குளிர்சாதனப் பெட்டி
2 ஆம் பரிசு LG தன்னியக்க துணி கழுவும் இயந்திரம்
3 ஆம் பரிசு 14" அலோய் வீல் செட்
4 ஆம் பரிசு பயனியர் கார் CD ரேடியோ (ஸ்பீக்கருடன்)
5 ஆம் பரிசு Whirlpool காஸ் அவன் அடுப்பு
6 ஆம் பரிசு Nokia செல்லிடத் தொலைபேசி
7 ஆம் பரிசு சிங்கர் மைக்ரோவேவ் அவன் அடுப்பு
8 ஆம் பரிசு 3M கார் மெட்ஸ் - 5 துண்டுகள்
9 ஆம் பரிசு 2 அடுப்பு காஸ் குக்கர்
10 ஆம் பரிசு ரைஸ் குக்கர்

புத்தம் புதிய மிட்சுபிஷி லான்ஸருக்கு நீங்கள் சொந்தக்காரர் ஆகலாம். தவறினால் 29" Flatron TVயுடன் LG DVD ஹோம் சினிமாவை அல்லது 8 கதிரைகள் கொண்ட உணவுமேசையை வெல்லலாம். ஜனரத அதிர்ஷ்டச் சக்கரம் மூலம் உங்களுக்கு மேலும் மேலும் பல சிறந்த பரிசுகள்.

ஜனரத பூரண மோட்டார் காப்புறுயைப் பெற்று ஜனரத அதிர்ஷ்டச் சக்கர மாபெரும் இறுதிப் பரிசுச் சீட்டிழுப்பிலும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் சீட்டிழுப்பிலும் சேர்ந்து கொள்ளுங்கள்.

இன்றே அதிவேகப் பாதையில் அடிவைத்து உங்கள் வாழ்க்கையின் சொகுசான பயணத்தை அனுபவியுங்கள்.

அதிர்ஷ்டம் உங்களை அழைக்கிறது !

ஜனரத அதிர்ஷ்டச் சக்கரம்

இன்றே உங்கள் ஜனரத காப்புறுதியை பெற்று வெற்றியாளராகுங்கள்

JANASHAKTHI INSURANCE

JANA RATHA

# இலங்கைப் பல்கலைக்கழக வன்முறைக் கலாசாரபீடம்

**பல்கலைக்கழகத்தில் தற்போது வன்முறைகள் தலைதூக்குகின்றன. அண்மையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக அதே பல்கலைக்கழக மாணவன் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவங்களை அடுத்து பல்கலைக்கழகங்களின் வன்முறைக் கலாசாரம் கற்பிக்கப்படுவது போலவும் அதற்கென தனியான பீடம் (FACULTY) இயங்குவது போலவும் கற்பனை செய்து வரையப்பட்ட கட்டுரை இது. "திவயின" வார இதழில் வெளியான அக்கட்டுரையின் மொழிபெயர்ப்பை இங்கு தருகின்றோம்.**

அண்மையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் குறித்தும் அந்த வன்முறைக்கு மாணவன் ஒருவன் பலியானது குறித்தும் நாடெங்கும் பேசப்படுகிறது. அதேநேரம் அந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த "வன்முறைக் கலாசார பீடம்" இதுவரை மௌனம் சாதித்துவந்தது தெரிந்ததே. அண்மையில் அந்த "வன்முறைக் கலாசார பீடத்தின் பீடாதிபதியைச் சந்தித்து உரையாட எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

வன்முறைக் கலாசாரப் பீடாதிபதியான பேராசிரியர் சொப்பே முதலில இது தொடர்பாகத் தெரிவித்த கருத்தில் "பலர் இந்தச் சம்பவத்தைத் தவறான கோணத்தில் நோக்குகின்றனர். உண்மையில் நாட்டின் தேசியத் தேவை கருதியே நாங்கள் வன்

## மாற்றார் தோட்டத்திலிருந்து

முறைக் கலாசாரத்தை பல்கலைக் கழகங்களில் அறிமுகப்படுத்தினோம. சீரற்று இருந்த வன்முறைக் கல்வியைச் சீராக்கியுள்ளோம். உண்மையில் இது இன்றைய தேசியத் தேவையாகும்.

மருத்துவர்கள், பொறியியலாளர்களைப்போலவே இன்று வன்முறையாளர்களும் நாட்டிற்குத் தேவைப்படுகின்றனர். கடந்த காலங்களில் வன்முறையாளர்களுக்கு பயங்கரமான தட்டுப்பாடு நிலவியது. தற்போது பாருங்கள் தேர்தல் ஒன்று நெருங்கும் வேளையில் வன்முறையாளர்களுக்கு எவ்வாறு தட்டுப்பாடு நிலவுகிறது? எமது வன்முறை பீடத்திற்கு வரும் விண்ணப்பங்களுக்கு ஏற்ப எங்களால் வன் முறையாளர்களைக் கொடுத்து உதவமுடியாத நிலைமை நிலவுகிறது.

வன்முறைக் கலாசார பீடாதிபதியைச் சந்தித்த பின்னர் பேராசிரியர் மதாவி சோமேயைச் சந்தித்தோம்.

"எமது வன்முறைக் கலாசாரப் பாடத்திட்டம் இரு முக்கிய பிரிவுகளைக் கொண்டது ஒன்று சித்தாந்த ரீதியான வன்முறைக் கலாசாரம் பற்றியது. மற்றையது செயல்முறைப் பயிற்சிகளைக் கொண்டது. சில மின்பொறியியலாளர்களுக்குத் தங்கள் வீட்டில் மின் பியூஸ் போயிருந்தால் அதைச் சரிசெய்யத் தெரியாது. சில சிவில் பொறியியலாளர்களை விட மேசனுக்கு வேலைகள் நன்கு தெரியும். இதில் இருந்து தெரிவது என்னவெனில் எவ்வளவு சித்தாந்த அறிவிருந்தாலும் செயல்முறை அனுபவம் அவர்களிடம் இல்லை என்பதேயாகும். எனவேதான் சித்தாந்த அறிவு மற்றும் செயல்முறை அனுபவம் ஆகிய இரண்டும் இன்றியமையாதவை. அன்று நடைபெற்றது (பல்கலைக்கழக மாணவன் தாக்கப்பட்டு பின்னர் மரணமானது) செயன்முறைப் பயிற்சி பட்டறையாகும். அவ்வாறான பயிற்சிப் பட்டறைகளை மென்மேலும் நடத்த முயற்சி செய்கிறோம்" என பேராசிரியர் மதாவி சோமே தெரிவித்தார். மதாவி சோமேயை அடுத்து அந்தப் பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கடுவெல வசந்தவைச சந்தித்தோம்.

எமது பீடத்தில் (வன்முறைக் கலாசார பீடம்) நான செயன்முறைப் பிரிவிலேயே பணியாற்றுகிறேன். எனவே, எமது மாணவர்களுக்கு வகுப்பறைகளில் கற்பிக்கப்படும் பாடங்கள் மற்றும் பயிற்சிகளை எவ்வாறு சமூகத்தில் பிரயோகிக்கலாம் என்பது குறித்த விடயத்தைப் போதிப்பதே எனக்களிக்கப்பட்ட கடமையாகும். எமது மாணவர்களுக்கு இந்த விடயத்தை ஒழுங்கமைந்த விதத்தில் நாங்கள் போதிக்காவிடினும் இந்தப் பாடம் (வன்முறைப் பிரயோகம்) ஒழுங்கமைந்த விதத்தில விஞ்ஞான ரீதியாகப் போதிக்கப்பட வேண்டிய தேவையின் அவசியத்தைப் புரிந்துள்ளோம். உதாரணமாக திடீர் நடவடிக்கை (தாக்குதல்) ஒன்றின் போது தங்களுக்குத் தேவையான கருவிகளை எவ்வாறு பெறுவது என்பது தொடர்பான அனுபவத்தைப் பெறும் பயிற்சியே அண்மையில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. கட்டில் சட்டத்தை கொலைக் கருவியாக எவ்வாறு பயன்படுத்தலாம், செங்கற்களை எவ்வாறு பயன்படுத்தலாம், கணனிகளை எவ்வாறு கொலைக் கருவிகளாகப் பயன்படுத்தலாம் ஆகியன தொடர்பான பயிற்சிகளை வழங்குவதே எமது திட்டமாக இருந்தது. இந்தப் பயிற்சிப் பட்டறையின்போது வெளிவாரி விரிவுரையாளராகப் பங்கேற்ற கலாநிதி கோணபல சுனில் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். அவரது சேவை களனிப் பிரதேசத்திற்கு மட்டுமே கிடைத்தது. இருப்பினும் அழைப்பாளர் என்ற விதத்தில் நாம் அவரது சேவையைப் பெற்றோம். பல்கலைக்கழகத்துடன் தொடர்புகளைக் கொண்டிராவிடினும் இந்தத்துறையில் வல்லுநர்களான (வன்முறைகளில்) பொலநறுவையைச் சேர்ந்த பொடி விஜே மற்றும் கலத்துரவே களு அல்பேர்ட் ஆகியோரிடமிருந்து எமக்குக் கிடைத்த ஒத்தாசைகள் அளப்பரியன. அவர்களின் அனுபவங்களை எமது மாணவர்கள் மத்தியில் பகிர்ந்தளிப்பதற்கென நாம் விசேட பயிற்சிப் பட்டறையை அமைத்தோம்.

இதன் பின்னர் கலாநிதி அதகொட சைமனைச் சந்தித்தோம். அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

"இந்தப் பாடத்தை (வன்முறைக் கலாசாரத்தை) நாங்கள் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தவுள்ளோம். எம்மிடம் படித்த ஆசிரியர்கள் பலர் தற்போதும் தத்தமது பாடசாலைகளில் மாணவர்களுக்கு இந்தப் பாடம் சம்பந்தமான அடிப்படை விடயங்களைப் புகட்டி வருகின்றனர் என்பதை நாம் அறிவோம். இது எமக்கு மிகவும் திருப்தியளிக்கிறது. இருப்பினும் பொதுவான பாடசாலைப் பாடத்திட்டங்களில் இந்தப் பாடத்தையும் சேர்ப்பது இவ்வளவு இலகுவான காரியம் அல்ல. இருப்பினும் எம்மிடமிருந்து பணிப்புரைகளைப் பெற்ற ஒருசில ஆசிரியர்கள் எவருக்கும் தெரியாத விதத்தில் மிகவும் சூட்சுமமாக வன்முறைக் கலாசாரம் தொடர்பான சிலசில விடயங்களை மாணவர்களுக்குப் புகட்டுவது மிகவும் போற்றத்தக்கது. எதிர்காலத்தில் இந்த ஆசிரியர்களை வெளிவாரி விரிவுரையாளர்களாக வன்முறைக் கலாசார பீடத்தில் இணைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்" எனத் தெரிவித்தார்.



கலாநிதி அத்தகொட சைமன் தனது எதிர்காலத் திட்டங்களை விவரித்த பின்னர் கலாநிதி வனத்தே சுதா, விருதுபெற்ற கலாநிதி அஹூன் கல்ல உக்குவா வன்முறைக் கலாசார பீடத்துடன் இணைக்கப்பட்டுள்ள விசேட ஆலோசகர் நவரியன் ஆகியோரும் தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். முடிவில் வன்முறைக் கலாசாரப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சொப்பே மேலும் பல கருத்துக்களைத் தெரிவித்தனர்.

எமது பீடத்திலிருந்து முதல் வகுப்பில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கே அதிக கிராக்கி உள்ளது. தேர்தல் சூடு பிடித்தவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் முதல் வகுப்பில் சித்தியடைந்த எமது பட்டதாரிகளை அனுப்பி வைக்குமாறு கோருகின்றனர். பெருந்தொகையில் சம்பளம் வழங்கி வேலை தருவதாகக் கூறுகின்றனர். அதேபோலவே முன்னாள் அமைச்சர்களும் கோருகின்றனர். அவர்களும் முதல் வகுப்பில் சித்தியடைந்த பட்டதாரிகளை அல்லது இரண்டாவது வகுப்பில் உயர்பிரிவில் (Upper Second) சித்தியடைந்த பட்டதாரிகளை அனுப்பும்படி கேட்கின்றனர், தேர்தலில் வெற்றி பெற்றவுடன் இந்தப் பட்டதாரிகள் உரிய முறையில் கவனிக்கப்படுவார்கள் எனவும் முன்னாள் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். இவற்றை விட கோடீஸ்வர வர்த்தகர்கள் தத்தமது பிரத்தியேக தேவைகளுக்காக நாளாந்தம் விண்ணப்பங்களை அனுப்பிய வண்ணம் உள்ளனர். இவற்றின் படி அரச துறையிலும் தனியார்துறையிலும் உள்ள பட்டதாரி (வன்முறை கலாசாரம்) வெற்றிடங்களை எம்மால் நிரப்பமுடியாமல் கடந்த காலத்தில் எம்மிடம் கல்வி கற்ற எத்தனையோ பேர் அரசியலில் ஈடுபட்டுள்ளதை மக்கள் அறிவர். இது தேசியத் தேவையாகும். இந்தத் தேசியத் தேவையை நிறைவு செய்யும் நோக்கில் எமது வன்முறைக் கலாசார பீடத்தை மறு சீரமைக்கவுள்ளோம். அதேநேரமே பட்டமளிப்பு விழாவையும் நடத்துவது எனத் தீர்மானித்துள்ளோம். அந்தப் பட்டமளிப்பு விழாவில் உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் பின்லேடனை பிரதம விருந்தினராக அழைக்கத் தீர்மானித்துள்ளோம். அந்தப் பட்டமளிப்பு விழாவை கடந்த காலங்களில் எங்கள் துறைசார்பாக மேற்கொள்ளப்பட்ட அனுபவம் மிக்க சேவையைப் போற்றும் விதத்தில் பலருக்கு கௌரவம் அளிக்கப்படவுள்ளது" எனத் தெரிவித்தார்.

பேராசிரியர் தனது கருத்துக்களைத் தெரிவித்துமுடித்ததும் எங்கே எதிரி, எங்கே எதிரி எனத் தொடங்கும் வன்முறைக் கலாசாரப் பீடகீதம் ஒலிக்கப்பட்டது. ☆

**தமிழில்: கஜனி**

# கலைஞர் மற்றும் எழுத்தாளர் மாநாடு

## திருமறை கலாமன்ற ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான மாநாடு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகிறது.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்கென தென்னிலங்கையிலிருந்து 27 பேரைக் கொண்ட கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் அடங்கிய குழு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளது. (ஒ-8)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2228254 இருந்து 2245880 வரை

சீட்டிழுப்பு இல. 1353

திகதி 27.11.2002

வெற்றி எண்கள் 03 05 06 12 40

போனஸ் எண் 56

ஜக்பொட் பரிசு

ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 101 | 10,000/- | 1,010,000/- |
| 3 | 5,695 | 500/- | 2,847,500/- |
| 2 | 93,469 | 20/- | 1,869,380/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 113,318 | 10/- | 1,133,180/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா 6,860,060/

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா. 2,380,800/-

தொடர் இல. 3222998க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 30ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2245709-7-43
2237852-9-51
2237638-9-59
2230588-3-52
2241747-6-52

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

## கொடிகாமத்தில் வீசப்பட்டது உள்ளூர் தயாரிப்பு கைக்குண்டு

கொடிகாமம் பகுதி வீடு ஒன்றினுள் கடந்த 23 ஆம் திகதி இரவு வீசப்பட்ட வெடிபொருள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நாட்டு வெடிகுண்டாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது. அப்போது அவர்களின் உடற் காயங்களிலிருந்து சைக்கிள் போல்ஸ்கள், கண்ணாடித்துண்டுகள் போன்றவை எடுக்கப்பட்டன. அத்துடன், சம்பவம் இடம்பெற்ற வீட்டினுள்ளும் நாட்டு வெடிகுண்டுக்குரிய பொருள்கள் சிதறிக் கிடக்கக்காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனை அடுத்தே, இச்சம்பவத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நாட்டு வெடிகுண்டு பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது. கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் மாவீரர் துயிலும் இல்லமருகேயுள்ள வீட்டில் இந்த வெடிச்சம்பவம் இடம்பெற்றிருந்தது. இதில் கிரனேட் வீசப்பட்டதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-12-15)

## இலவச மருத்துவமுகாம்

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். அரிமாக்கழகம் நடத்தும் இலவச மருத்துவமுகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் இயங்கும் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் கண் பரிசோதனை இலவச மூக்குக் கண்ணாடி வழங்குதல் போன்ற சேவைகள் இடம்பெறும் என்றும் -

அரியாலை வாழ் மக்களை இதில் கலந்து பயன்பெறுமாறும் அரியாலை அபிவிருத்திச் சங்க உபதலைவர் கேட்டுள்ளார். (எ-5)

### பரீட்சை நிலையம் இடம் மாற்றம்

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கென செம்பியன்பற்று அ.த.க.பாடசாலையில் அமையவிருந்த பரீட்சை நிலையம் மருதங்கேணி இ.த.க.பாடசாலைக்கு இடம்மாற்றப்பட்டதென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-115)

### மாங்குளம் - முல்லை பிரதான வீதி மோசமான நிலையில்

முள்ளியவளை,நவ.29

மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான வீதி மக்கள் பயன்படுத்த முடியாத வகையில் மிகமோசமான நிலையில் காணப்படுகின்றது. இதில் முள்ளியவளைக்கும் தண்ணிரூற்றுக்கும் இடைப்பட்ட பகுதியே அதிகளவில் சேதமுற்றுள்ளது.

தற்போது பெய்துவரும் பருவ மழை காரணமாக நிலைமை இன்னும மோசமாகவுள்ளது.

ஏனைய வீதிகள் எல்லாம் செப்பனிடப்பட்டுவரும் இவ்வேளையில், இவ்வீதி மட்டும் கேட்பாரற்றுக் கிடப்பது வேதனைக்குரிய விடயம் என மக்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-ரி)

### ஊனமுற்றோர் தின நிகழ்வுகள்

பருத்தித்துறை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள ஊனமுற்றோர் தின நிகழ்வுகள் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9 மணிக்கு செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் ஊனமுற்ற இருவருக்கு முச்சக்கர வண்டியும், ஒருவருக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்படவுள்ளன. ஊனமுற்றோர் பயன்படுத்தும் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-180)

## சற்பிரசாதம் வழங்குவதற்கு தகுதியானோரை நியமிக்குக!

### யாழ்.ஆயர் கடிதம்மூலம் அறிவிப்பு

யாழ்.மறைமாவட்டத்திலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் பூசைப் பலியின்போது, பொதுமக்களுக்குத் திவ்விய சற்பிரசாதங்களை வழங்கும பணிக்காக பொதுமக்களில் தகுதியானவர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர் என யாழ்.ஆயர் மேதகு தோமஸ சௌந்தரநாயகம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்திலுள்ள ஆலய பங்குக் குருக்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் கடந்த 24ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கத்தோலிக்க தேவாலயங்களில் நடைபெற்ற திருப்பலியின்போது பங்குக் குருக்களினால் வாசிக்கப்பட்டு விளக்கமளிக்கபட்டது.

இந்த அறிவித்தலின்படி உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ்பவர்கள் பங்குக் குருக்களினால் இனங்காணப்பட்டு, செபத்தின்பின்னர் தெரிவு செய்யப்படுவர். தொடர்ந்து அவர்களுக்கு யாழ்.மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையத்தால் ஆன்மீக இறையியல் பயிற்சி வழங்கப்பட்டு தகுதியானவர்கள் தெரிவுசெய்யபபடுவர். பின்னர் இவர்களுக்கு திருச்சபையில் சடங்கு முறைப்படிநற்கருணை பணியாளர் பட்டம் வழங்கப்பட்டு, அவர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

இவர்கள் திருப்பலியின்போது குருக்கள், தியாக்கோன்கள், அருட்சகோதரிகள்போ[illegible] பூசையின்போது வந்திருக்கும் பக்[illegible]கு நற்கருணையை வழங்குவர்.

இந்தமுறை யாழ்.மாவட்டத்தில் மட்டும்தான் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்றும் - வெளிநாடுகளிலும், தென்னிலங் கையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களிலும் ஏற்கனவே நடைமுறையிலுள்ளது என்றும் -

திருவிழாக் காலங்களிலும், ஞாயிறு திருப்பலிகளின்போதும் நற்கருணை பெறுவதற்கு பெருமளவில் பக்தர்கள் கூடும்போது திருப்பலியை நடத்தும் குருவானவர் மட்டும் அனைவருக்கும் நற்கருணை வழங்குவதில அதிக நேரமும் சிரமமும் ஏற்படுவத னால், பொது நிலையினரையும் இப்பணிக்கு அழைக்கவேண்டியது அவ சியமாகவுள்ளது என்றும் - யாழ் ஆயர் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, கத்தோலிக்க தேவாலயங்களில் பூசைப் பலியின்போது வழங்கப்படும் நற்கருணை விருந்தில் (சற்பிரசாதம்) குருக்கள், தியாக்கோன் மற்றும் அருட்சகோதரிகள் மட்டுமே சம்பந்தப்பட்ட குருவானவரிடமிருந்து சற்பிரசாதப் பேழையைப் பெற்று மக்களுக்கு சற்பிரசாதத்தை வழங்கிவருகின்றனர். (எ-51)

## 13 வயதுக்குட்பட்டோர் உதை பந்தாட்ட அணி தாய்லாந்து, நேபாளம் நாடுகளுக்கு விஜயம்

13 வயதுக்குட்பட்ட இலங்கை உதைபந்தாட்ட வீரர்கள் தாய்லாந்து, நேபாளம் ஆகிய நாடுகளில் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

பலமான உதைபந்தாட்ட அணியொன்றை உருவாக்கும் நோக்குடன், 13 வயதுக்குட்பட்ட குழாமொன்றைத் தெரிவுசெய்து இலங்கை உதைபாந்தாட்டச் சம்மேளனம் பயிற்சியளித்து வருகிறது.

இக்குழாமிலுள்ள 30 வீரர்களும் தாய்லாந்து சுற்றுலாவில் பங்குபற்றவுள்ளனர். டிசெம்பர் 9 முதல் 17ஆம் திகதிவரை இச்சுற்றுலா நடைபெறும். 'விங் கொமாண்டர்' நந்தன அபேரத்ன இலங்கைக் குழுவின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏ.ஆர்.எம்.மஹிந்த பால, ரி.எவ். சாமத், ரி.சந்திரசிறி, சுமித் வல்பொல ஆகியோர் இலங்கை அணியின் பயிற்றுநர்களாக இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவ்வாறு இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவர் ஜே.எஸ்.என்.ஆனந்தராஜா அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

14 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கிண்ண முதல் சுற்றுப் போட்டிகள் டிசெம்பர் 20 முதல் 28ஆம் திகதிவரை நேபாளத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கான பயிற்சிக்காகவே தாய்லாந்துக்கு இலங்கை அணி செல்லவுள்ளது. இப்பயிற்சிகளின் பின் 18 வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டு நேபாளத்திற்கு அனுப்பப்படுவர்.

ஏனைய வீரர்கள் பயிற்றுநர் சுமித் வல்பொலவுடன் இலங்கைக்குத் திரும்புவர்.

14 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணப் போட்டிகளின் முதல் சுற்றில் இலங்கைக் குழு 'ஏ'இல் இடம்பெற்றுள்ளது. இந்தியா, மாலைதீவு, இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகியன இக்குழுவில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வோர் அணியும் ஏனைய அணிகளுடன் தலா ஒரு தடவை மோதவுள்ளன.

13 வயதுக்குட்பட்டோருக்கான இலங்கைக் கால்பந்தாட்டக் குழாம் குறித்து ஜே.எஸ்.என்.ஆனந்தராஜா மேலும் தகவல் தருகையில்:-

"600 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களில் இருந்து மாவட்ட மற்றும் தேசிய ரீதியிலான போட்டிகளில் 60 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களில் இருந்து 30 பேர் கொண்ட குழாம் தெரிவுசெய்யப்பட்டது.

ஒவ்வொரு வார இறுதியிலும் இவ்வீரர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. கடந்த மாதம் இப்பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நான்கு வருடங்களின் பின் இவ்வீரர்கள் மூலம் 17 வயதுக்குட்பட்ட அணியொன்றை உருவாக்கமுடியும் என நம்புகிறோம். அதன் பின்னரும் இப்பயிற்சித் திட்டம் தொடரவுள்ளது.

30 பேர் கொண்ட குழாமிற்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து மன்னார் சென்.சேவியர் கல்லூரி மாணவர் ஒருவரும் திருமலை சென்.ஜோசப் கல்லூரி மாணவர் ஒருவரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். ஆனால், திருமலை மாணவர் பயிற்சிகளுக்குச் சமுகமளிப்பதை நிறுத்திவிட்டார். இதனால் வேறொரு மாணவர் இக்குழாமில் சேர்க்கப்பட்டார்" - இவ்வாறு ஆனந்தராஜா கூறினார்.

## மைத்துனரின் விக்கெட்டை வீழ்த்திய இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்!

ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் தனது மைத்துனரின் விக்கெட்டை வீழ்த்தினார் இங்கிலாந்து வீரர் கிரேக் வைட்.

ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் டெரன் லெஹ்மனின் மனைவி அன்ட்றியா, இங்கிலாந்து வீரர் கிரேக் வைட்டின் சகோதரியாவார்.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை கிரேக் வைட்டின் பந்துவீச்சில் 5 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார் லெஹ்மன்.

'அவரை ஆட்டமிழக்கச் செய்த போது எனது சகோதரி குறித்து எண்ணினேன்' என்று கிரேட் வைட் கூறினார்.

அதுவொரு புதுமையான சூழ்நிலை. ஆனால், இது கிரிக்கெட். நான அவரை ஆட்டமிழக்கச் செய்ய முயன்றேன். அவர் எனது பந்து வீச்சில் ஓட்டங்களைப் பெறமுயன்றார். ஆனால், அத்தருணத்தில் என் சகோதரி ஆன்ட்றியா எப்படி உணர்ந்தார் என அறிய விரும்புகிறேன். இது வேடிக்கையான விடயம்.

இவ்வாறு கிரேக் வைட் அன்றைய ஆட்டம் முடிவுற்றபின் கூறினார்.

"லெஹ்மன் துடுப்பெடுத்தாட வந்தபோது நான் அவரைப் பார்ப்பதைத் தவிர்த்தேன். ஏனெனில் அவர் என்னைச் சிரிக்கவைத்து விடுவார்" எனவும் வைட் கூறினார்.

இங்கிலாந்து, யோர்க் ஷயரில் பிறந்தவர் கிரேக் வைட். இவர் இங்கிலாந்து அணியில் இடம்பெறுவதற்கு முன், 1990 - 94வரை ஆஸ்திரேலியாவின் விக்டோரியா அணிக்காக போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# விளையாட்டு

## அனைத்துப் பிரிவுகளிலும் தோற்கடிக்கப்பட்டோம் இப்படிக் கூறுகின்றார் ராகுல் ட்ராவிட்

மே.இ.தீவுகள் அணிக்கு எதிராக 7ஆவது ஒருநாள் போட்டியில் கிரிக்கெட் விளையாட்டின் அனைத்துப் பிரிவுகளிலும் தோற்கடிக்கப்பட்டதாக இந்திய அணியின் தலைவர் ராகுல் ட்ராவிட் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து ராகுல் ட்ராவிட் கூறுகையில், "எங்களைவிட (இந்தியா) மே.இ.தீவுகள் அணியினர் மிகச் சிறப்பாக விளையாடினர். இந்த வெற்றிக்கு மே.இ.தீவுகள் முற்றிலும் தகுதியானதே என்று கூறினார்.

மிகவும் வருத்தத்துடன் காணப்பட்ட ட்ராவிட், இந்தத் தோல்விக்கு துடுப்பாட்ட வீரர்களையோ, பந்து வீச்சாளர்களையோ குறைகூறவில்லை.

அணி வீரர்கள் அனைவரையும் தங்களது 100 சதவீத விளையாட்டைக் கொடுக்கவேண்டும் என்று கடைசி 2 போட்டிகளில் கேட்டுக் கொண்டேன். இருப்பினும், எந்த வீரர் மீதும் நான் குறைகூறவிரும்பவில்லை. ஏனெனில், அனைத்து வீரர்களும் சிறப்பாக விளையாடினர் - என்று கூறினார்.

கிரிக்கெட் விளையாட்டின் அனைத்துப் பிரிவுகளிலும் நாம் தோற்கடிக்கப்பட்டோம். 40ஆவது ஓவர் வரை மே.இ.தீவுகளின் ஆட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம். அதன் பிறகு சாமுவேல்ஸின் அதிரடியால் மே.இ.தீவுகள் மிகப் பெரிய இலக்கை எட்டியது. மே.இ. தீவுகள் இந்தத் தொடர் முழுவதுமே சிறப்பாக விளையாடியுள்ளது. ஆனால், இந்தப் போட்டியில் சாமுவேல்ஸின் அதிரடி விஷேடமானது.

மே.இ.தீவுகளை 275 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தத் திட்டமிட்டிருந்தோம். ஆனால், திட்டம் பலிக்கவில்லை. மேலும், ஆரம்பத்திலேயே முக்கிய விக்கெட்டுக்களை இழந்ததும் நமக்கு நெருக்கடி ஏற்படுத்தி விட்டது" - என்று ட்ராவிட் மேலும் கூறினார். (ஒ-5)

## மார்லன் சாமுவேல்ஸின் கைக்குட்டை ரகசியம்

இந்தியாவுடனான 7ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் மே.இ. தீவுகள் அணியின் மார்லன் சாமுவேல்ஸ் சதம் அடித்ததும் தனது 'பொக்கெட்'டிலிருந்து சிவப்பு கைக்குட்டையை எடுத்துக்காண்பித்தார். இதுகுறித்து ஆட்டநாயகன் விருது பெற்றதும் பேட்டியளித்த சாமுவேல்ஸ் குறிப்பிடுகையில்,

கடந்த ஆண்டு தனக்கு இந்தச் சிவப்புக் கைக்குட்டையை ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவ்வோ கொடுத்தார் எனக்கூறினார்.

இத்தொடரின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவான கைல், விருதுபெற்றவுடன் கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்தியாவை அவர்களது சொநத மண்ணில் வீழ்த்துவது என்பது மிகவும் கடினம். ஆனால், நாம் வெற்றி பெற்றுவிட்டோம்" - என்றார். (ஒ-5)

## 129 பந்துவீச்சுகளில் 258 ஓட்டங்கள்! 12 வயது வீராங்கனை உலக சாதனை!!

12 வயதான சிறுமியொருவர் மகளிர் கிரிக்கெட் போட்டியொன்றில் ஆட்டமிழக்காமல் 258 ஓட்டங்களைப பெற்று சாதனை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் 13 வயதுக்குட்பட்ட மாநில மகளிர் அணிகளுக்கிடையான போட்டியொன்றிலேயே இச்சாதனை படைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் கௌடேங் அணியும், கௌடேங் வடக்கு அணியும் மோதின. வடக்கு ஜோஹான்னஸ் பார்க்கிலுள்ள சான்ட்ரொன்னில் இப்போட்டி நடந்தது.

இப்போட்டியில் கௌடேங் வடக்கு அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனை மிக்னன் டியூ பிரீஸ் 129 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 258 ஓட்டங்களைக் குவித்தார்.

இவற்றுள் 16சிக்ஸர்களும் 25 பௌண்டரிகளும் அடங்குகின்றன.

40 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டியொன்றிலேயே மிக்னன் ஆட்டமிழக்காமல் 258 ஓட்டங்களைப பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மகளிர் கிரிக்கெட்டில் இதுவோர் உலக சாதனையாகும்.

இவரின் தந்தை ஜக் கௌடேங், வடக்கு மாகாணத்தில் கனிஷ்ட பயிற்றுநர்களில் ஒருவராக விளங்குகிறார்.

நான்கு வயதிலேயே மிக்னன் கிரிக்கெட்டில் ஆர்வம் காட்டினார் என ஜக் கூறுகிறார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான தென்னாபிரிக்க அணியில் பிரீஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

இப்போட்டிகள் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ளன.

"மிக்னன் இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கு 20ஆயிரம் ராண்ட் (சுமார் 2லட்சம் ரூபா) பணம் தேவைப்படுகிறது. இவர் ஓர் ஆணாக இருந்தால் இந்நேரம் பூரண அனுசரணை கிடைத்திருக்கும்" என்று ஜக் கூறியுள்ளார். (ஒ)

## மரதன் போட்டியின் போது மூவர் மாரடைப்பால் மரணம்!

மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய ஜப்பானியர்கள் மூவர் மாரடைப்பால் மரணமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை ஜப்பானில் இரு வெவ்வேறு நகரங்களில் நடந்த இரு போட்டிகளில் இச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

புகுசியாமா நகரில் நடந்த மரதன ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய 58 மற்றும் 59 வயதுடைய இருவர் மரணத்தைத் தழுவினர். அம்புலன்ஸ்மூலம் இவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதிலும் காப்பாற்றப்பட முடியவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

8 ஆயிரத்து 800 பேர் இப்போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நாகோயா நகரில் நடைபெற்ற 10 கிலோமீற்றர் ஓட்டப் போட்டியின்போது 58 வயதான ஒருவர் மரணமடைந்தார். அவர் 8 கிலோமீற்றர்கள் ஓடிய நிலையில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. மருத்துவர்கள் ஸ்தலத்துக்கு விரைந்தபோது இப் போட்டியாளரின் இதயம் மற்றும் நுரையீரல்கள் செயலிழந்திருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானிய இளவரசர் ஒருவர் ஸ்கொஷ் பயிற்சியின்போது மாரடைப்பால் காலமாகி இருதினங்களின் பின இச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)